ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் அணா 4

மலர் 22	பிப்ரவரி 1961	இதழ் 2

ஓரளவு மகிழ்ச்சி – இப்போது!
ஆனால்
முழு மகிழ்ச்சி – எப்போது?

பிப்ரவரித் திங்கள் 24-ஆம் நாளன்று தமிழ் நாட்டு ஆட்சியாளர்கள்மிக முக்கியமான ஓர் அறிவிப்பைச் செய்துள்ளார்கள். தமிழ் நாட்டு அரசாங்கத்தின் அறிக்கைகள், செய்திகள், பதிவேடுகள் முதலியவற்றில் தமிழகத்தின் பெயரைக் குறிப்பிட வேண்டிய நேரங்களில் எல்லாம் தற்போது சென்னை ராஜ்யம் என்கிற பெயரை குறிக்கப்பட்டுவருகிறது அல்லவா? இதற்கு மாறாக இனி தமிழ்நாடு என்கிற பெயரையே வழங்க ஆட்சியாளர்கள் முடிவு செய்துள்ளார்கள் என்று 24-2-61 அன்று தமிழ் நாட்டுச் சட்டமன்றத்தில் அமைச்சர் சி. சுப்ரமண்யம் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு, ஆயிரமாயிரம் தமிழ் மக்களின் இதயத்தில் இன்பத் தேனைப் பாய்ச்சுவதாக அமைந்துள்ளது. எந்தத் தமிழ்நாடு என்னும் பெயரைச் சூட்ட வேண்டுமென்று தமிழ் மக்கள் அத்தனைப் பேரும் ஒருமித்த குரலில் உரிமை முழக்கம் எழுப்பி வந்தார்களோ, அந்தத் தமிழ்நாடு என்னும் பெயரைச் சூட்டினால்தான் தமிழகத்தின் தன்மானம் நிலைநாட்டப்படும்—தமிழ் மொழியின் பெருமை ஓங்கி உயரமுடியும் என்று தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் அத்தனையும் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தனவோ, எந்தத் தமிழ்நாடு என்னும் பெயர் சூட்டப்படாத காரணத்தால் தமிழகத்தின் நற்பெயரில் பெரியதோர் களங்கம் இருந்து வந்ததோ, அந்தத் தமிழ் நாடு என்னும் பெயர் இப்போது அதிகார பூர்வமாக அமைக்கப்பட்டு விட்டது என்பதை அறியும்போது தமிழகத்து மண்ணிலே பிறந்த எந்த மனிதருக்குத்தான் மகிழ்ச்சி தோன்றாமலிருக்க முடியும்?

அரசாங்கத்தின் அறிவிப்பைக் கண்டு தமிழகத்து மக்கள் மன்றத்தில் மகிழ்ச்சி கொக்களிப்பதைப் போலவே நம் உள்ளத்திலும் இன்பத் தென்றல் பவனிவருகிறது ஆம்! பூரிப்படைகிறோம் செய்தி கேட்டு! பெருமைப் படுகிறோம் ஆட்சியாளர்களின் செயல் அறிந்து! பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் இந் நற்செயல் புரிந்தமைக்காக? ஆனால்......!

அரசாங்கத்தின் செயலால் நமக்கு உருவாகியுள்ள மகிழ்ச்சியும் சரி, முழு மகிழ்ச்சியாக இல்லை. உண்மையை ஒளிக்காது சொல்வதானால், அரசாங்கத்தின் அறிக்கையால் ஓரளவு மகிழ்ச்சிதான் மக்கள் மன்றத்தில் உருவாகியுள்ளது; முழு மகிழ்ச்சி ஏற்படவில்லை.

தமிழ் நாட்டின் பெயரைத் தமிழ்மொழியில் குறிப்பிடும்போது மட்டும்தான் இனி தமிழ்நாடு என்று அழைக்கப்படும் என்பதாக அரசாங்க அறிக்கை தெரிவிக்கிறது. இந்திய அரசியல் திட்டத்தில் இனியும் தமிழ்நாட்டின் பெயர் சென்னை ராஜ்யம் என்றேதான் இருக்குமாம்! அந்தத் திட்டத்தைத் திருத்திப் பெயரை மாற்றி அமைப்பதற்கான நடவடிக்கை ஆட்சியாளர்கள் எடுக்கப் போவதில்லையாம்! ஆங்கில மொழியில் தமிழகத்தின் பெயரைக் குறிக்க வேண்டிய இடங்களில் எல்லாம் இனியும்கூட சென்னை ராஜ்யம் என்றேதான் குறிப்பிடப்படுமாம்! அந்த நிலையிலும் மாற்றம் இருக்காதாம்!! அமைச்சர் சுப்ரமண்யனார் அளித்துள்ள அறிவிப்பில் தமிழ் மக்களால் ஏற்கமுடியாத இந்த விபரீதச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன!

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் அரசாங்கத்தின் அறிவிப்பால் தற்போது உருவாகியுள்ள நிலைமை இதுதான் தமிழ்

மக்களுக்காக, தமிழ் மொழியில் எழுதப்படும் அறிக்கைகள் கடிதங்கள்—செய்திகள் முதலியவற்றில் தமிழ்நாடு என்னும் பெயரும், பிற மாநில மக்களுக்காகவும் ஆங்கில மொழியில் எழுதப்படும் அறிக்கைகள்—கடிதங்கள்—செய்திகள் முதலியவற்றில் சென்னை ராஜ்யம் என்னும் பெயரும் இடம் பெறும்.

தமிழ்நாட்டு ஆட்சித் தலைவர்கள் ஏன் இந்த இரட்டைக் கோலம் புனைய வேண்டும் என்பதுதான் நமக்குப் புரியவில்லை. தமிழ் மொழியில் எழுதப்படும் அறிக்கைகள் முதலிய அனைத்திலும் தமிழ்நாடு என்று குறிப்பிட அரசாங்கத்தார் ஒப்புக்கொண்டதிலிருந்து, தமிழ்நாடு என்னும் பெயர் சூட்டப்பட வேண்டியதன் நியாயத்தை—அவர்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

தமிழ்நாடு என்னும் பெயர்தான் நியாயமான பெயர் என்றால் தமிழ் மொழியில் எழுதும்போது மட்டுமல்ல, ஆங்கில மொழியில் எழுதும்போதும் அதே பெயர்தானே வழங்கப்பட வேண்டும்? அப்படி வழங்கப்படுவதுதானே முறை—ஒழுங்கு—நேர்மை அப்படியின்றி, தமிழ் மொழியில் எழுதப்படும் போது ஒரு பெயரும் ஆங்கில மொழியில் எழுதப்படும் போது மற்றோர் பெயரும் வழங்கப்படுவது எப்படி முறையாகும்?

அது போலவே, தமிழ்நாடு என்னும் பெயர்தான் நியாயமானது என்றால், அரசாங்கம் வெளியிடும் அறிக்கைகளில் மட்டுமல்ல, இந்திய அரசியல் திட்டத்திலும் அந்தப் பெயர் பொறிக்கப்படுவது தானே முறை? அவ்வாறின்றி, அரசாங்க அறிக்கைகளில் ஒரு பெயரும், அரசியல் திட்டத்தில் மற்றோர் பெயரும் இருந்தால் அது எப்படி ஒழுங்கான நடைமுறை ஆகும்?

"ஆற்றிலே ஒரு கால்; சேற்றிலே ஒரு கால்" என்பது தமிழ்மொழியில் வழங்குகிற ஒரு பழமொழி

"முன்னால் பார்த்தால் முருகன் குதிரை; பின்னால் பார்த்தால் பொன்னன் குதிரை" என்பது நாட்டிலே உலவுகிற மற்றோர் முதுமொழி.

"பானுக்கும் காவல ; பூனைக்கும் தோழன்" என்பது மக்கட் சமுதாயத்தில் பேசப்படுகிற இன்னோர் பழமொழி.

இனிக் கையாளப்போவதாக அரசாங்கத்தார் அறிவித்துள்ள நடைமுறை, இந்தப் பழமொழிகளையே நமக்கு நினைப்பூட்டுவதாக அமைந்துள்ளது.

தமிழ் நாடு என்னும் பெயர்தான், தொல்காப்பியர் காலத்தி லிருந்து இந்தக் காலம் வரையில் வழங்கிவருகிற பெயர்; தமிழ் மக்கள் அத்தனைப்பேராலும் விரும்பப்படுகிற பெயர்; தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள் அத்தனையாலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள பெயர்; தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி என்கிற பெயரைத் தனக்குத் தானே சூட்டிக் கொண்டதன் வாயிலாகக் காங்கிரஸ் கட்சியாலும் முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே ஏற்றுக் கொள்ளப்பட்ட பெயர்; தமிழ் எழுத்தாளர்கள், மாணவர்கள், புலவர் பெருமக்கள், அலுவலர்கள், வணிகப் பணியினர் அத்தனைப் பேராலும் விரும்பப் படுகிற பெயர்; சென்னை மாநகராட்சி மன்றத்தாலும், எண்ணற்ற நகராட்சி மன்றங்கள்—ஊராட்சி மன்றங்களாலும் தீர்மானங்கள் வாயிலாக வற்புறுத்தப்பட்டுள்ள பெயர்; தமிழகத்தின் பெருமையை-புகழை - உயர்வை - ஒப்பற்ற தன்மையை - தொன்மையை உலகத் திற்கு எடுத்து விளக்கக்கூடிய பெயர்.

இத்தனைச் சிறப்புக்களையும் உடைய விழுமிய பெயரை விட்டு விட்டு, ஒரு சிறப்பும் இல்லாத சென்னை ராஜ்யம் என்னும் பெயரை, அரசாங்கத்தார் இவ்வளவு அரும்பாடுபட்டுக் கட்டிக் காப்பாற்ற வேண்டிய அவசியம் என்ன என்பதைத்தான், எத்தனை முறை ஆராய்ந்து பார்த்தாலும், நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

சென்னை ராஜ்யம் என்னும் பெயரே; தொடர்ந்து இருக்கவேண் டும் என்னும் கருத்துக்கு ஆதரவாக, நாம் அறிந்தவரை, இதுவரை ஒரே ஒரு வாதம்தான் எழுப்பப்பட்டு இருக்கிறது. சென்னை ராஜ்யம் என்னும் பெயர்தான் உலகத்தில் உள்ள ஏனைய நாடுகள் யாவற்றிற்கும் தெரிந்தபெயராக உள்ளது என்றும், அப்படி நன்கு தெரிந்த பெயராக உள்ள ஒன்றை எடுத்துவிட்டு தமிழ்நாடு என்னும் பெயரை சூட்டினால் உலக மக்களின் கவனத்தை நம்மால் கவர முடியாது என்றும் சில சமயம் சிற்சிலரால் பேசப்படுகிறதே, அது ஒன்றுதான், சென்னை ராஜ்யம் என்னும் பெயருக்கு ஆதரவாக எழுப்பப்படுகிற ஒரே ஒரு வாதம்.

இந்த வாதம் ஒரு சிறிதும் பொருத்தமில்லாத சொத்தை வாதம் என்பது, இதனை ஆர அமர இருந்து ஆய்ந்து பார்க்கும் எவரும் எளிதில் ஏற்றுக்கொள்ளும் உண்மையாகும்.

அபிசீனியா என்று நெடுநாட்களாக அழைக்கப்பட்டுவந்த ஒரு நாட்டின் பெயர் எதியோபியா என்று சில ஆண்டுகளுக்கு முன்பு தான் அந்த நாட்டு அரசாங்கத்தால் மாற்றப்பட்டது. அப்படி மாற் றப்பட்டதால் அந்த நாட்டைப்பற்றிய கவனம் உலகத்தில் உள்ள ஏனைய நாடுகளுக்கு இல்லாமலா போய்விட்டது?

சையாம் என்று நீண்ட காலமாக உலவிவந்த பெயரை தாய் லாந்து என்று அந்த நாட்டு மக்கள் மாற்றிக்கொண்டார்களே, அத ஞல் அந்த நாட்டை உலகம் மறந்தா போய்விட்டது?

பெர்ஷியா என்று வரலாற்று ஏட்டில்கூட ஏறிவிட்ட பெயரை ஈரான் என்று அண்மைக்காலத்தில் அந்த நாட்டு ஆட்சிப்பீடம் மாற்றி அமைத்ததே, அப்படி மாற்றி அமைத்ததால் உலக மன்றத் தில் அந்த நாட்டுக்கு இடம் இல்லாமலா போய்விட்டது?

இந்த நாடுகளின் பெயர்கள் மாற்றப்பட்ட பிறகும் உலகம் இந்த நாடுகள் அனைத்தையும் மறவாமல் நினைவில் வைத்துக் கொண்டிருக் கும்போது, சென்னை ராஜ்யம் என்னும் பெயரைத் தமிழ்நாடு என்று மாற்றினால் மட்டும் உலகம் நம்மை மறந்துவிடும் என்று கூறுவது உண்மைக்கு நேர்மாறான வாதமாகும்.

ஆகவே தமிழ்நாட்டு அரசாங்கத்தார் தமிழ்நாடு என்னும் பெயரைத் தமிழ் மொழியில் எழுதும்போது மட்டும் பயன்படுத் தாமல், ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில் எழுதும்போதும் பயன் படுத்த வேண்டும். இந்திய அரசியல் திட்டத்திலும் தமிழ்நாடு என் னும் பெயரையே நம் மாநிலத்தின் அதிகாரபூர்வமான பெயராகப் பொறிக்கவேண்டும். சென்னை ராஜ்யம் என்னும் தேவையில்லாத பெயரை அடியோடு ஒதுக்கித் தள்ளிவிட்டு, தமிழ்நாடு என்னும் பெயரையே எம் மொழியிலும் எங்கிலேயிலும் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தமிழ் மொழியில் மட்டும் "தமிழ்நாடு" என்னும் பெயரை வழங்குவது—இது, இப்போது தமிழ்நாட்டு அரசாங்கத்தார் எடுத்து வைத்துள்ள முதல் அடி. இருந்த இடத்திலேயே அசையாமல் நின்று கொண்டு பிடிவாதம் புரியாமல், சிறிதளவு அசைந்து, முதல் அடி எடுத்து வைத்துள்ளார்களே—அதற்காக நம் பாராட்டு.

எம் மொழியிலும், எச்சமயத்திலும் "தமிழ்நாடு" பெயரையே வழங்குவது—இது, அவர்கள் எடுத்து வைக்கவேண்டிய இரண்டா வது அடி.

இந்த இரண்டாவது அடியையும் அவர்களுடைய கால்கள் விரைவில் எடுத்து வைக்கவேண்டும். எடுத்து வைத்தால்தான் தமிழ் மக்கள் முழு மகிழ்ச்சி அடைவார்கள்.

எடுத்து வைப்பார்களா? தமிழ் மக்களுக்கு முழு மகிழ்ச்சியை அளிப்பார்களா?

★

நாட்டுக்குத் தேவையான நல்ல திட்டம்!

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் சில கல்லூரிகள் தேர்ந்தெடுத்து, அந்தக் கல்லூரிகளில் மாலை வகுப்புகள் நடத்துவதற்கான திட்டம் ஒன்றை இந்திய அரசாங்கத்தார் தீட்டி வருவதாகச் தாளிதழ்களில் வெளியான செய்தி ஒன்று தெரிவிக்கிறது. இப்படிப்பட்ட திட்டம் மிகவும் இன்றியமையாதது என்பது நம்முடைய கருத்து.

எஸ். எஸ். எல். சி வகுப்பு வரை படித்துத் தேர்ந்து அலுவலங்களில் பணியாற்றும் பலர், கல்லூரிக் கல்வியையும் கற்று அதற்குரிய பி. ஏ, எம். ஏ. முதலிய பட்டங்களையும் பெற்று உயர விரும்புகின்றனர். ஆனால் அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக அவர்கள் தங்களுடைய அலுவல்களிலிருந்து ஓய்வு பெற்று கல்லூரிகளில் சேர்ந்து படிப்பது என்பது இயலாத செயல். ஏனென்றால் அவர்கள் தங்கள் அலுவல்களிலிருந்து ஓய்வு பெற்றால் அவர்களுக்கு ஊதியம் கிடைக்காது, ஊதியம் கிடைக்காவிட்டால் அவர்களுடைய குடும்பங்களை நடத்திச் செல்ல இயலாது.

இப்படிப்பட்ட சங்கடங்களைத் தவிர்ப்பதற்காகவே மேலை நாடுகள் பலவற்றில், கல்லூரிகளில் மாலை வகுப்புகளை நடத்துகின்றார்கள். முழுநேர மாணவர்களாகச் சேர்ந்து படிக்க இயலாத நிலையில் உள்ளவர்கள் இப்படிப்பட்ட மாலை நேர வகுப்புகளிற் சேர்ந்து, இங்கே புகட்டப்படுகிற பாடங்களைக் கேட்டறிந்து, ஆண்டு இறுதியில் நடத்தப்படும் பரீட்சைகளில் அமர்ந்து தேர்வு பெறுகின்றனர்.

இப்படிப்பட்ட வசதி இருப்பதால் அந் நாடுகளில் எண்ணற்ற மக்கள் அலுவல்களில் பணியாற்றி ஊதியம் பெற்றுத் தங்கள் குடும்பங்களை நடத்திக் கொண்டே, ஓய்வு நேரத்தில் படித்துப் பயிற்சி பெற்றுப் பட்டதாரிகள் என்கிற உயர் நிலையையும் அடையமுடிகிறது. அதுமட்டுமல்ல, கல்லூரிகளில் மாணவர்களுக்கு இடமில்லாத நெருக்கடி இங்கே ஏற்படுகிறது அல்லவா? அத்தகைய நெருக்கடி மேல்நாடுகளில் ஏற்படாமல் இருப்பதற்கும் இந்த மாலை நேர வகுப்புகள் துணைபுரிகின்றன. கல்லூரிகளில் முழுநேர மாணவர்களாகச் சேர்வதற்கு வாய்ப்புப் பெறுவோர்கள் அவ்வாறே சேர்ந்துவிடுகின்றனர். அத்தகைய வாய்ப்பைப் பெறாதவர்கள், மாலை நேர வகுப்புகளிற் சேர்ந்து அதே பட்டங்களுக்கான பாடங்களைப் பயிலமுற்படுகிட்றனர்.

இத்தகைய முறையில் நேர வகுப்புத் திட்டத்தின்படி அளிக்கப் படுகிற கல்வியின் தரம் உயர்ந்ததாக இருக்காது என்று சிலர் கூறு கின்றனர். இது ஏற்றுக் கொள்ளத் தக்க வாதம் ஆகாது. பாடத் திட்டம் போதுமான தரம் உடையதாக உருவாக்கப்பட்டு, சிறந்த தகுதி படைத்த பேராசிரியர்களைக் கொண்டு கல்வி புகட்டப்பட் டால், கல்வியின் தரம் எப்படிக் குறையமுடியும்?

எல்லாக் கல்லூரிகளிலும் உடனடியாக இந்தத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டிய அவசியமில்லை. அது விரும்பத்தக்கதுமல்ல முதலில் சிற்சில கல்லூரிகளில் மட்டும் இந்தத் திட்டத்தை நடை முறைப் படுத்தலாம். சிறிது காலத்திற்குப் பின்னர் படிப்படியாக இந்தத் திட்டத்தைப் பிற கல்லூரிகளுக்கு விரிவுபடுத்தலாம்.

★

நெடுநாள் உயிர் வாழ்வதெப்படி?

[பேராசிரியர் எ. லிபோவ்]

நம் அனைவருக்கும் மூப்பு தவிர்க்க முடியாதது. எனினும் வெவ்வேறு நபர்களுக்கு இது வெவ்வேறு விதமாக இருக்கக்கூடும். இயற்கையாகவே உடலுறுப்புகள் மூப்பு எய்துவது ஒரு விதம். அப்போது உள்ளத் தெளிவும், வேலை செய்யும் திறனும் பாதிக்கப் படுவதில்லை. தக்க பருவம் வருமுன்னரே உடலுறுப்புகளுக்குத் தளர்ச்சியேற்படுவதன் மூலமும் ஒருவர் மூப்பு எய்தி விடலாம். குறிப்பிட்ட சில நோய்களின் காரணமாக உடல் இத்தகைய மூப்பு அடைகிறது.

அகாலத்தில் உடல் தளர்ச்சியடைவதன் காரணமாக இந்த நோய்கள் தோன்றுகின்றன. ஆரோக்கியமற்ற நிலைமைகளும் அகால மூப்புக்கு வழிகோலக் கூடும்.

தளர்ச்சியின் காரணமாக மனிதனுடைய வேலை செய்யும் திறமை சன்னஞ் சன்னமாகக் குறையும் பொழுது, அவருடைய மனம் புண்படுகிறது. ஆழ்ந்த அறிவும் அனுபவமும் பெற்றிருந்த போதிலும், தன் பழுத்த ஞானத்தை ஈடுபடுத்தி தாய்நாட்டுக்குத் தொண்டாற்ற இயலவில்லையே என்று அவருடைய மனம் நோகிறது. தளர்ச்சியடைவதை அகால மூப்பு என்றுதான் கருத வேண்டும். சோவியத் யூனியனில் பலபேர் நூறு ஆண்டுகளுக்குமேல் வாழ் கிறார்கள்.

மனிதன் 120 முதல் 150 ஆண்டுகள் வரை வாழ முடியும்.

அகால மூப்பு அடைவதற்கான காரணங்களையும், தளர்ச்சியுண்டாக்கும் நோய்களையும் ஆராய்ந்து, இவை ஏற்படாமல் தடுக்கவும், சிகிச்சை செய்யவும் வழிமுறைகளைக் கண்டு பிடிப்பதற்காக சோவியத் யூனியனில் ஒரு விசேஷ ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டிருக்கிறது. இந்த ஆராய்ச்சி மிகவும் சிக்கலானதாகும்.

ஒவ்வொரு மனிதருடைய மூப்பும் சிற்சில பிரத்தியேக இயல்புகளைக் கொண்டிருக்கின்றன. எனவே எல்லாருக்கும் ஒரே விதமான சிகிச்சை இருக்க முடியாது.

"அகால மூப்பு அடைவதை மருந்துகள் மூலம் தடுப்பது, சிகிச்சை செய்வதுபற்றி" என்று டி. இ. சொபதரேவும் எஸ். ஐ. பதுயேவும் எழுதிய கட்டுரையில் இப்பிரச்னையைப்பற்றி ஆராய்கின்றனர்.

மூப்பு அடையும்போது ஏற்படும் வெவ்வேறு மாற்றங்களிலும் உபயோகப்படுத்தப்பட்ட பலவிதமான மருந்துகளின் விளைவுகளைப் பற்றி கட்டுரை ஆசிரியர்கள் விளக்குகின்றனர்.

மீண்டும் "புத்திளமையை" அளிப்பது போலத் தோன்றக் கூடிய ஹார்மோன்கள் விரிவாக உபயோகிக்கப் பட்டன. ஆனால் மருந்துகளைத் தொடர்ந்து நீண்ட நாட்கள் உபயோகிப்பதால் வேறு வித சில சிக்கல்கள் ஏற்படக்கூடும். அது மட்டுமல்ல; இத்தகைய சிகிச்சையை திறமை மிக்க நிபுணரால்தான் அளிக்க முடியும்.

கன்றுக் குட்டி, ஆட்டுக் குட்டியின் கருச்செல்களை உடலினுள் செலுத்துவதை அடிப்படையாகக் கொண்ட சிகிச்சை முறை கடந்த சில ஆண்டுகளாக மேற்கு நாடுகளில் விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த சிகிச்சையினால் நல்ல பலன் ஏற்படுவதில்லை. அகால மூப்பையும் தளர்ச்சியையும் தடுப்பதற்கு வைட்டமின் தெராப்பி முறையே சாலச் சிறந்தது என்று கட்டுரை ஆசிரியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

முதிய வயதினருக்கு அளிக்கப்படும் உணவு விஷயத்திலும் சில முக்கியமான அம்சங்களைக் கவனிக்க வேண்டும். புரோட்டீன்கள், வைட்டமின்கள், இரும்பு மற்றும் ஏனைய உலோக உப்புக்கள் முதலியன உணவில் கணிசமான அளவு இருந்த வேண்டும். திரவப் பொருள் அதிகமாக உட்கொள்வதால் வயதான சிறு நீரகத்திற்கு அதிக பாரமேற்படுகிறது என்று கருதுவது தவறு. இதற்கு மாறாக சோகை நோய் இல்லையெனில், திரவப் பொருள் அதிகமாகக் கொடுக்க வேண்டியது அத்தியாவசியமாகும். ஏனெனில், சிறிய அளவு அடர்ந்த சிறுநீரைச் சுரப்பது சிறு நீரகத்திற்கு மிகவும் கஷ்டமானதாகும்.

(தொடரும்)

சென்னை மாவட்ட உதவிபெறும் துவக்கப்பள்ளிகளின் ஆசிரிய, நிர்வாகிகள் நிர்வாகிகள் சங்கம்

1961, பிப்ரவரி 15-ந் தேதி மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் திரு. A.R. சேஷாசலம் அவர்கள் தலைமையில், சென்னை, புதுத்தெரு 94–95, ஆரம்பக்கல்வி நிலையத்தில் மாலை 5-30 மணிக்குக் கூடிற்று.

நிறைவேறிய தீர்மானங்கள்

(1) சம்பளம் வசூலிக்காத உதவிபெறும் ஆரம்பப்பள்ளிகளுக்கு எவ்வித காரணத்தாலும் குறைக்காமல் 100-க்கு 20 சதவீதம் (Maintenance grant) நிர்வாக கிராண்ட் கொடுக்கப்பட வேண்டுமென்று அரசியலாரைக் கேட்டுக்கொள்வது.

(2) 1961-62 ஆண்டுக்கு மேற்படி சங்கத்தின் கூட்டுக் காரியதரிசிகளாகத் திரு V. A. பாலகிருஷ்ணன் அவர்களும், திரு. K. கணேசன் அவர்களும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை,
15-2-1960

A. R. சேஷாசலம்,
தலைவர்.

குறிப்பு: சம்பளமே வசூலிக்காத பாடசாலைகளை நிர்வாக வரவு செலவுக் கணக்கு அனுப்பும்படியும் அதன் செலவுக்கான (Vouchers) ரசீதுகளைக் காண்பிக்க வேண்டுமென்று கேட்பதிலும் அர்த்தமில்லை. சம்பள வசூலே இல்லாதபோது நிர்வாகிகள் செய்யும் செலவுகளை காட்டச் சொன்னால் நிர்வாகக் கிராண்டுக்காக வேண்டிப் பலகணக்குகளைத் தயாரிக்க அவசியம் ஏற்படுகிறது. அப்படித் தயார் செய்யும் கணக்குகளை சில அதிகாரிகள் ஒப்புக்கொள்வதும் இல்லை. இன்ன இன்ன செலவுகளுக்குத்தான் நிர்வாக கிராண்டு கொடுக்கப்படும் என்று திட்டவட்டமான அறிக்கை எதுவும் கல்வி அதிகாரிகள் கொடுத்ததில்லை. இந்தச் சிக்கலான சூழ்நிலையில் கல்வி அதிகாரிகளுக்கும் நிர்வாகிகளுக்கும் மனக்கசப்பும் பல தகராறுகளும் அடிக்கடி ஏற்படுகின்றன. ஆதலால் 20% நிர்வாக கிராண்டு ஆசிரியர் சம்பளத்தின் பேரில் கணக்கிட்டு மாதாமாதம் கொடுக்கப்படுமானால் நிர்வாகம் நன்றாக நடைபெற ஏதுவாக இருக்கும். நிர்வாகக் கிராண்டைக் கொடுத்துவிட்டு வருடக் கடைசியில் நிர்வாகப் பணம் நிர்வாகிகள் சரியாகச் செலவு செய்யவில்லையானால் அடுத்த வருடம் காரணம் காட்டி நிர்வாகப் பணத்தைக் குறைக்கலாம்.

சென்னை தீர்மானத்தைப்போல் எல்லா மாவட்ட சங்கங்களும் கூட்டம்போட்டுத் தீர்மானங்கள் செய்து தீர்மானத்துடன் நாம் கொடுத்துள்ள குறிப்பையும் சேர்த்து மாவட்ட கல்வி அதிகாரிகளுக்கும், டைரக்டருக்கும், கல்வி மந்திரிக்கும் அனுப்பும்படிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

P. வீரராகவன்,
தலைவர், சென்னை மாகாண உதவி பெறும் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள், ஆசிரிய நிர்வாகிகள் சங்கம்.

தென்னாற்காடு மாவட்ட உதவிபெறும் துவக்கப்பள்ளிகளின் ஆசிரிய நிர்வாகிகள் — நிர்வாகிகள் சார்பில்

சென்னை மாநில முதலமைச்சர் கனம் K. காமராஜர் அவர்களிடமும், கல்வியமைச்சர் C. சுப்பிரமணியம் B.A.B.L., அவர்களிடமும், மாநிலப் பொதுக்கல்வி இயக்குனர் திரு. நெ. து. சுந்திர வடிவேலு M.A.L.T. அவர்களிடமும் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள்

திருவாளர்கள் P. R. *சீனிவாச படையாச்சி* M.L.A., S. *தங்கவேலு* M.L.A., V. L. *எத்திராஜுலு* M. L. C., (Caddalore), *இவர்களுடன்* 21-1-61 *மாலை கனம். கல்வி மந்திரி முதலியவர்களை நேரில் பேட்டிகண்டு சென்னையில் இந்தக் கோரிக்கைகள் நேரில் கொடுக்கப்பட்டன.*

பொறுப்புடைப் பெருந்தகையீர் !

உதவிபெறும் துவக்கப்பள்ளி நிர்வாகிகட்கு ஏற்பட்ட இன்னல்களைப் போக்கிப் பள்ளிகளைத் திறம்படவும் செம்மையாகவும் நடத்துவதற்குக் கீழ்க்கண்ட கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றோம். கல்வி முன்னேற்றத்திற்கு அரும்பாடு பட்டுவரும் தாங்கள் இவைகளைக் கண்ணுற்றுத் துயர்போக்க வேண்டுகிறோம்.

1. (a) *வாழ்க்கைச் செலவினங்கள் பன்மடங்கு ஏறியது போலப் பாடசாலை நிர்வாகச்செலவுகளும் பன்மடங்கு ஏறிவருகிறது. எல்லாப் பள்ளிகளுக்கும்* 20 *சதவிகிதம் நிர்வாக கிராண்டு* (Maintenance grant) *நிரந்தரமாகக் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்ளப் படுகிறது. இந்த* 20 *சதவிகிதமும் கல்வி முன்னேற்றத்தைக் கருதிக் குறைக்காமல் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.*

(b) *நிர்வாக கிராண்டு அளிக்கும் விஷயத்தில் பள்ளிக்கு உண்டாகும்படியான செலவினங்களில் சில ஒப்புக் கொள்ளப்படுகின்றன. பல செலவினங்கள் ஒப்புக்கொள்ளப்படவில்லை. இம்முறையை மாற்றிப் பாடசாலைகட்கு உண்டாகும் செலவுகள் அனைத்தையும் ஒப்புக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.*

2. (a) *நிர்வாகி* T.P.F. *பங்கை இன்றைய நிலையில் ஒப்புக் கொள்வதில்லை.* 1960*ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் சம்பளக் கமிஷன் அறிக்கையின்படி ஆசிரியர்களின் ஊதியம்* (Pay) *முன்னிருந்ததைவிடக் கிட்டத்தட்ட இரண்டரை மடங்காகும் நிலை ஏற்படு*

கிறது. பெருந்தொகையொன்று இதற்காகச் செலவிடுகின்ற நிலையிலும் ஒப்புக்கொள்ளப்படாமலிருந்தால் நிர்வாகம் எவ்வகையிலும் நடத்துவது மிகவும் கடினம். ஆகவே இனியாகிலும் 1960 முதல் நிர்வாகியின் T. P. F. பங்கைப் பாடசாலையின் T. P. F. பங்காக ஒப்புக்கொள்ளப்படுகிற செலவை எடுத்துக்கொள்ளும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(b) சில பள்ளிகளில் நிர்வாகிகள் பள்ளி நடத்துவதற்காகக் காலி மனைகளைக் குறைந்த வாடகைக்கு எடுத்துக்கொண்டுள்ளனர். அந்த மனைகளில் வகுப்பறைகள் நடத்துவதற்குக் கொட்டகைகள் போட்டுள்ளனர். கொட்டகைபோடும் செலவையும், அதைப்பழுது பார்க்கும் செலவையும் கல்வி அலுவலர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை. இந்நிலையை மாற்றி மேற்கண்ட செலவு வகைகளை ஒப்புக்கொள்ளும் படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(c) பாடசாலைச் செலவுகளை ஒப்புக்கொள்ளக்கூடியவை, ஒப்புக் கொள்ளக் கூடாதவை என இரண்டு பிரிவுகளாக இன்றைய நிலையில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. எவை ஒப்புக்கொள்ளக் கூடியவை, எவை ஒப்புக்கொள்ளக் கூடாதவை என்ற தெளிவான வரையறுப்பும் இன்றைய நிலையில் எதுவும் இல்லை. இவ்வரையறுப்பு மாவட்டத்திற்கு மாவட்டம் ஆங்காங்குள்ள கல்வி அலுவலர்களின் சொந்த அபிப்பிராயத்தில் வேறுபட்டு நிற்கிறது. ஆகவே இம் முறை யில் பாடசாலையின் நிர்வாகமும் முன்னேற்றமும் பெரிதும் பாதிக்கப் படுவதால் இத்தகைய தொல்லைகள் பலவும் நீங்குவதற்கு முதல் தீர் மானத்தில் கேட்டுக்கொண்டபடி 20 சதவிகிதம் நிர்வாக மானியம் அளிக்கும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(d) இப்போது நிர்வாகச் செலவு அதிகமாகிவிட்டபடியால் நிர்வாக மானியம் ஒவ்வொரு ஆண்டுக் கடைசியில் வழங்கப்பட்டு வந்தால் ஆண்டு முழுமையும் செலவிற்குப் பொருள் இல்லாமல் தொல்லைப்பட வேண்டியுள்ளது. ஆகவே நிர்வாக மானியத்தையும் போதனை மானியத்தைப்போல மாதாமாதம் வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. (a) 300-க்கு மேற்பட்ட மாணவர்களைக்கொண்ட பள்ளி களில் கீழ்க்கண்ட சிப்பந்திகளைப் பணியில் அமர்த்திக்கொள்ள அனு மதி கொடுக்கும்படியும் அவர்களுக்காக ஊதியத்தை வழங்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. 1. பியூன் (Peon), 2. காவல்காரர் (Watchman), 3. நீர் கொடுப்பவர் (waterman), 4. பெருக்கு பவர் (Swepeer), 5. மாணவர்களை நடத்திச் செல்பவர் (Conductress).

(b) 750-க்கு மேற்பட்ட மாணவர்களைக்கொண்ட பள்ளி களுக்கு (clerk-cum-attender)ஐயும் அனுமதித்து அவர்களுக்கு ஊதியம் வழங்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(c) தற்சமயம் 10—வகுப்புப் பிரிவுகளுக்கு மேற்பட்டுள்ள பள்ளிகளுக்கு ஒரு அதிகப்படி ஆசிரியர் அனுமதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு 10 பிரிவுகளுக்கும் ஒவ்வொரு அதிகப்படி ஆசிரியர்வீதம் அனுமதிக்கும்படி கோரப்படுகிறது. ஆனால் இவ்விதியின்படி 20 அல்லது 30 பிரிவுகள் இருந்தாலும் ஒரு அதிகப்படி ஆசிரியரே அனுமதிக்கப் படுகின்றனர்.

4. 300 க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களுக்கு Duty allowance ஐ மாணவர்களின் தொகைக்கேற்பக் கொடுக்கும்படிக் கோரப்படுகிறது.

5. ஆசிரியர் பள்ளி நலனுக்கும், கல்வி நலனுக்கும், ஊறுவிளை விக்கும் வகையில் இருப்பதாகப் புலப்பட்டால் பள்ளியின் நிர்வாகி அவ்வாசிரியரை மூன்று மாத முன் அறிக்கை கொடுத்து பணியி லிருந்து விலக்கலாமென முன்பு விதி இருந்தது. ஆனால் இப்போ துள்ள துவக்கப்பள்ளி விதி அவ்வாறு நீக்க வாய்ப்பளிக்கவில்லை. இதனால் பாடசாலை முன்னேற்றம் கல்வித்திறம் சீர்குலைந்து வரு கிறது. இந்நிலை நீடிப்பதால் கல்வித்தரம் குறையத் துவங்கியுள்ளது. இவைகளைத் தவிர்க்க நிர்வாகி ஆசிரியரைப் பணியிலிருந்து நீக்க முன்பு இருந்த விதியைக் கொண்டுவரக் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

இவ்வண்ணம்,

ப. சு. லட்சுமணசுவாமி,
தலைவர்.

த. கோ. அரங்கநாதன்,
செயலாளர்

வை நடேசன்,
பொருள்காப்பாளர்.

கி. வெ. கோவிந்தசாமி

A. அப்பாசாமி
செயற்குழு உறுப்பினர்கள்

தென்னாற்காடு மாவட்டத் துவக்கப்பள்ளிகளின் ஆசிரிய நிர்வாகிகள் சங்கம்.

Deputation met the Hon. C. Subramaniam B. A, B. L. on 21-1-61, at 1. P. M. in the Secretariat

P. R. சீனிவாச படையாட்சி M. L. A
V. L. எத்திராஜுலு, M. L. C
S. தங்கவேலு M. L. A

ஆசிரிய மானேஜர்கள், மானேஜர் சங்கம் இராசிபுரம் ரேஞ்சு 29-1-61

1961ம் ஆண்டு ஜனவரி மாதம் 29ந் தேதி ஞாயிற்றுக் கிழமை காலே 10 மணிக்கு, இராசிபுரம் ரேஞ்சு ஆசிரிய மானேஜர்கள் & மானேஜர்கள் கூட்டம் கூடிக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் ஏகமன தாகத் தீர்மானிக்கப்பட்டன.

தீர்மானம். 1. இராசிபுரம் சிறகத்திலுள்ள சில பொருள் உதவி பெற்று வரும் துவக்கப் பள்ளிகளுக்கு 1960ம் ஆண்டுக்கு பள்ளி மேனேஜ்மெண்டார் வரவு செலவுக் கணக்குகளைச் சரிவர ஒப்புவித் தும், நிர்வாகக் கிராண்டு பெரும்பாலான பள்ளிகளுக்கு நூற்றுக்கு 2½%, 5%, 7½% என்ற சதவிகிதப்படி சேலம் ஜில்லா கல்வி அதிகாரி அவர்களால் வழங்கப் பட்டும், சில பள்ளிகளுக்கு இல்லாமலும் இருப் பதை இச்சங்கம் வருத்தத்துடன் ஏற்றுக் கொள்ளுகிறது

தீர்மானம் 2. பள்ளி நிர்வாகத்திற்கு வேறு வழியின்றி நிர்வாகக் கிராண்டையே நம்பிப் பள்ளி நடத்த வேண்டியுள்ளதால், 1960ம் ஆண்டுக்குக் குறைந்த பட்சம் 10% சதவிகிதமாவது எல்லாப் பள்ளி களுக்கும் நிர்வாகக் கிராண்டு கொடுக்க வேண்டுமென இச்சங்கம் கல்வி இலாகா டைரக்டர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் 3, சென்னை கல்வி இலாக்கா டைரக்டர் அவர்களின் உத்திரவு டிஸ். என். 7533/58. தேதி 6-11-58, மேற்கண்ட உத்திர வுப்படி ஓர் ஆசிரியரை நியமனம் செய்யும்பொழுது சராசரி ஆஜர் பள்ளி முழுதுக்கும் கணக்கிடாமல், வகுப்புவாரியாகக் கணக்கிட்டு ஆசிரியர்களை நியமிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. அதற்காக ஓர் விளக்கமும் ஷை உத்திரவில் காணப்பட்டிருக்கிறது. ஷை உத்திரவை அமுல் செய்வதில் அசிரத்தையாய் இல்லாமல், இதனுல் கல்வியின் தரம் பாதிக்கப்படுவதால், கண்டிப்பாக மாவட்டக்கல்வி அதிகாரி அமுலாக்க வேண்டும் என்பதை இச்சங்கம் மாநிலக் கல்வி இயக்குனர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் 4. 1961ம் ஆண்டு முதல் ஒரு வருடத்திற்கு 12 நாட்கள் சிறு விடுப்பும், 3 நாட்களுக்கு சமூக சம்பந்தமான விசேட நாட்களுக்கு அனுமதியும், இம்மாநில கெஜட் பதவியில்லாத ஊழியர்களுக்கு அளித்துள்ளதைப் போல், மானேஜ்மெண்டில் வேலைபார்க்கும் எல்லா ஆசிரியர்களுக்கும் 12 நாட்கள் சிறு விடுப்பும், 3 நாட்கள் சமூக சம்பந்தமான விசேட நாட்களுக்கு அனுமதியும் வழங்க இச்சங்கம் மாநில கல்வி இயக்குனர் அவர்களைக் கேட்டுக் கொள்வதோடு, இதை இந்த ஆண்டிலிருந்து அமுல் செய்ய உத்திரவு வழங்க வேண்டுமாய் இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் 5. இச் சங்கம் பொருள் உதவி பெறும் பள்ளிகளில் 5 ஆசிரியர்களுக்குமேல் வேலை செய்யும் பள்ளிகளுக்கும், உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கும், ஒரு ஜவானை (ப்யூன்) நியமிக்கவும், அவருக்கு சம்பளம் நிர்ணயித்து அதை மாதா மாதம் அனுப்பிக் கொடுக்க வேண்டுமாய் இச்சங்கம் சர்க்காரையும், கல்வி இலாகா டைரெக்டரையும் கேட்டுக் கொள்கிறது.

1961ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் தேதி ஞாயிற்றுக் கிழமை இராசிபுரம் ரேஞ்சு ஆசிரிய மானேஜர்கள்—மேனேஜர்கள் மாத சபை நடவடிக்கைகள்.

தலைவர் திரு. எ. ராமசாமி பிள்ளை

இராசிபுரம் திருவேங்கட விலாஸ் ஹையர் எலிமெண்டரி பாடசாலை, மானேஜர் திரு. அ. குப்பையர், அவர்களை 1961-ம் வருடத்திற்குத் தலைவராக இருக்க திரு. எல். தர்மராஜன் அவர்களால் பிரேபிக்கப் பட்டு திரு. கே. கருப்பன் அவர்களால் ஆமோதிக்கப் பட்டது.

செயலாளர் திரு. எ. சுப்ரமண்யம் பிள்ளை அவர்களைத் திரு. எல். தர்மராஜன் அவர்கள் பிரேபிக்க, திரு. செங்கோட்டுவேலு அவர்களால் ஆமோதிக்கப் பட்டது.

உபதலைவர் திரு. எ. ராமசாமி பிள்ளை அவர்களை திரு. நாராயணபிள்ளை அவர்களால் பிரேபிக்க, திரு. எல். தர்மராஜன் அவர்களால் ஆமேதிக்கப்பட்டது.

நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களாக 1. திரு. எல். என். முத்துசாமி, 2. திருமதி அலுமேலு அம்மாள், 3. திரு. நாராயண பிள்ளை, 4. திரு. செங்கோட்டு வேல், 5. திரு. கே. கருப்பன் அவர்களால் பிரேபிக்கப்பட்டு திரு. செங்கோட்டு வேல் அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

தீர்மானம். 1

பாடசாலைகளின் நிர்வாக செலவைச் சரிப்படுத்தப் பாடசாலைகளுக்கு எந்தவிதமான வருவாயும் இல்லாததால் பள்ளி சம்பந்தமான எல்லாவித செலவுகளையும் ஏற்றுக் கொண்டு இவ்வருடம் 1960 முதல் 20 சத விகிதம் நிர்வாகக் கிராண்டு கொடுக்கலாம் என்ற அரசாங்க உத்திரவை அமுல் நடத்தும்படியாக அரசாங்கத்தையும் கல்வி அதிகாரிகளையும் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம். 2.

நிர்வாகக் கிராண்டு கணக்கிடும்போது எந்தெந்தச் செலவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்ற பட்டியலை எல்லா மேனேஜ்மெண்டாருக்கும் அனுப்பிக் கொடுக்குமாறு மாவட்டக் கல்வி அதிகாரி அவர்களைக் கேட்டுக் கொள்ளலாமாகத் தீர்மானிக்கப் பட்டது.

தீர்மானம். 3.

புதியதாக ஆசிரியர்களை நியமனம் செய்யும் பொழுது புதிய ஆசிரியர் மாணவர் விகிதப்படி மூன்று மாத சராசரி ஆஜர் இருந்தால் ஒரு புதிய ஆசிரியரை நியமிக்க மானேஜ்மெண்டாருக்குப் பூர்வ உரிமை அளிக்கவேண்டுமாய் இச்சங்கம் மாநில அரசாங்கத்தையும் கல்வி அதிகாரிகளையும் கேட்டுக் கொள்கிறது)

தீர்மானம். 4.

ஆசிரியர் மாணவர் விகிதம் 1 : 35 என்றிருப்பதால் மாணவர்களின் கல்வித்திறம் மிகவும் பாதிக்கப் படுவதால், இதை மாற்றி, 1930 முதல் 1958 ஜூன் வரையுள்ள பழைய முறைப்படி 1 : 20 பிள்ளைகள் என்ற விகிதத்தை மீண்டும் அமுல் நடத்தும்படி இச்சங்கம் அரசாங்கத்தையும் கல்வி அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கிறது.

சொகுசான வாழ்வு:
நாட்டையே செல்லரித்துவிடும்
(அமெரிக்கத் தலைவரின் அறிவுரை)

["சும்மா இருப்பதே சுகம்" என்று எந்த மகானுபாவர் சொல்லி வைத்தாரோ, தெரியவில்லை; நகத்தில் அழுக்குப்படாமல் நாலு காசு சம்பாதிப்பதே மிகப் பெரிய மதிப்பாகக் கருதும் மனப் பான்மை சமுதாயத்தில் வளர்ந்துவிட்டது. உழைப்பு என்றாலே கசப்பு என்று ஆகிவிட்டது. இதன் பயனாக மக்கள், குறிப்பாக இளைஞர்கள் உடல் வலிமையும் மன வலிமையும் குன்றி வருகிறார் கள். இந்நோய் நம் நாட்டில் மட்டுமல்ல, அமெரிக்காவிலும் பரவி விட்டது என்பதைச் சமீபத்தில் அமெரிக்காவின் 35-வது ஜனாதிபதி யாகப் பதவியேற்ற திரு. ஜான் கென்னடி அவர்கள் அறிவித்துள் ளார். இதைப்பற்றி அவரது கருத்துக்கள் "சண்டே ஸ்டாண்டர்ட்" வார இதழில் 2.)-ந்தேதி வெளிவந்துள்ளன. அவற்றின் சாரத்தை இங்கே தந்துள்ளோம். உடலால் உழைக்காதவர்கள், உண்பதற்கும் தகுதியற்றவர்கள் என்று கூறிய காந்தியடிகளின் நாட்டில் இக் கருத் துக்களின் முக்கியத்துவம்பற்றி எடுத்துரைக்க வேண்டியதில்லை.]

2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, கிரீஸ் தேசத்தின் பல பகுதிகளிலிருந்தும் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒலிம்பியா வில் மிகச்சிறந்த விளையாட்டுக்காரர்களெல்லாம் வந்து போட்டிகளில் கலந்துகொள்வது வழக்கமாக வந்திருக்கிறது. அவைகளில் வெற்றி பெற்றவர்கள் வீரர்கள் என்று மிகவும் மதிக்கப்பட்டார்கள்; போற் றிப் புகழப்பட்டார்கள். மனிதன் அடையவேண்டிய லட்சியங்களில் ஆட்டத் திறமையும் ஒன்று, வலிமை வாய்ந்த மக்களே ஒரு நாட்டின் அடிப்படைச் செல்வம் என்று அவர்கள் கருதினார்கள். தத்துவம், நாடகம், அரசாங்கம், ஓவியம்—இவற்றில் மிகவும் உன்னதமான சாதனையைப் படைத்த கிரேக்க நாகரிகம் உடல் வலிமைக்கு எவ்வ ளவு முக்கியத்துவம் தந்துள்ளது என்பதை நாம் நினைவு கூறவேண் டும். ஈட்டனிலுள்ள விளையாட்டுக் களங்களே ஐரோப்பாவின் வின் போர்க்களங்களில் வெற்றியைத் தந்தன என்பது பிரிட்டிஷா ரின் நம்பிக்கை. ஒரு நாட்டின் நல்வாழ்வுக்கு மக்களின் உடல் வலிமை அவ்வளவு இன்றியமையாதது.

(தொடரும்)

பிரிட்டிஷ் அரசி இரண்டாம் எலிசபெத்

கடந்த ஜனவரி மாதம் 20-ம் நாளன்று பிற்பகலில் அரசி எலிஸபெத் அவர்களும் குழுவினரும் பிரிஸ்டல் பிரிட்டானியா விமானத்தில் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தனர். நீலம்-வெள்ளை வர்ணங்கள் தீட்டப்பட்ட நிமிர்ந்த வாலுள்ள பிரிட்டானியா 312-ரக விமானம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அடிக்கடி வருவதில்லை. லண்டன் தூரக்கிழக்கு நாடுகள் பாதையில் பறக்கும் பிரிட்டானியா 102 ரக விமானத்தைவிட இது உருவில்பெரிது, ஆற்றல்மிக்கது. மணிக்கு 400 மைல் வேகத்தில் செல்லக் கூடிய இந்த விமானம், பதினேழு மணி நேரத்தில் லண்டனிலிருந்து இந்தியாவுக்கு வந்து விட்டது.

ராஜரிகப் பயணத்திற்கு உபயோகிக்கப்படும் விமானங்கள் விநாடி பிசகாமல் குறிப்பிட்ட இடத்திற்குப் போய் சேருவது வழக்கம். திட்டமிட்டுப் பயணப்படுவதால் கிடைக்கும் வெற்றி இது. மகாராணியின் இந்தியா, பாக்கிஸ்தான் பிரயாணத்திற்காக ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பைப் பி. ஓ. ஏ. ஸி. விமானக் கம்பெனி ஏற்றுக்கொண்டிருக்கிறது. மகாராணி பிரயாணம் செய்யும் பிரிஸ்டல் பிரிட்டானியா விமானம் பல்லாயிரம் மைல்கள் பறக்கக்கூடும். அது பதினைந்து விமான நிலையங்களில் தங்கிச் செல்லும். லண்டனிலிருந்து ஜனவரி இருபதாம் தேதி பிற்பகலில் புறப்பட்ட விமானம் மறு நாள் பதினொரு மணிக்கு குறிப்பிட்ட நேரத்தில் புது டில்லிக்கு வந்து சேர்ந்து விட்டது.

மகாராணி பயணம் செய்யும் விமானத்தில் சிறந்த முறையில் இருக்கைவசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மகாராணி வீற்றிருக்கப்பிறை வடிவமான ஓர் அறையும், உணவருந்த அறையும், இரட்டை படுக்கைகளுள்ள அறையும், உடன்வரும் பரிவாரங்களுக்காக இருபது ஆசனங்களுள்ள ஓர் அறையும் அமைக்கப் பட்டிருக்கின்றன.

மகாராணியின் பிரயாணத்திற்கான விமானத்தை நிச்சயித்ததும் அதை ஏற்ற முறையில் மாற்றியமைக்கத் தொடங்கினார்கள். எஞ்சின்களையும் மற்ற உறுப்புக்களையும் சரிபார்த்தார்கள். மகாராணி உபயோகிக்கும் அறைகளில் சாய்மனைகளை அமைத்து ஏற்றமுறையில் அலங்காரம் செய்

யப்பட்டது. பயண காலத்தில் உபயோகிக்கும் பொருள்களை வைக்க நிலைமாடங்கள் அமைக்கப்பட்டன.

வழி நெடுகிலும் பிரயாணப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதிலும் பி. ஓ. ஏ. ஸி. விமானக் கம்பெனி கவனம் செலுத்திற்று. வழி நெடுகிலுமுள்ள விமான நிலையங்களுக்குத் தகவல் கொடுத்திருப்பதுடன் எதிர்பாராமல் விமானத்தில் ஏதாவது பழுது ஏற்பட்டால் அதைசீராக்க தகுதி வாய்ந்த எஞ்சினியர்களை நிறுத்தி வைக்கவும் விமான் உதிரி உறுப்புக்களைச் சேமித்துவைக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறது. ராஜாங்க விமானம் செல்லும் பாதையில் எவ்விதக் குறுக்கீடு மேற்படாமலிருக்க எச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

ஐரோப்பாவிலுள்ள பழம்பெரு ராஜ குடும்பங்களுடன் உறவு பூண்டதும், தொன்மையும் தனிச் சிறப்புடையதுமான பிரிட்டிஷ் ராஜ பரம்பரையில் தோன்றிய எலிஸபெத் அரசியார் சுதந்திர நாடுகள் ஒன்றாகச் சேர்ந்து அமைத்துக் கொண்ட காமன்வெல்த்தின் தலைவியாக விளங்குகிறார்.

எலிஸபெத் அலெக்ஸான்ட்ரா மேரி 1926-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ஆம் நாளன்று யார்க் கோமகனுக்கும் சீமாட்டிக்கும் திருப்புதல்வியாகத் தோன்றினார். இளவரசி எலிசபெத்தின் பிள்ளைப் பிராயம் லண்டனில் கழிந்தது. இளவரசி எலிஸபெத்தும் அவருடைய சகோதரி இளவரசி மார்கெரெட்டும் அரண்மனையிலேயே மிஸ் மேரியன் கிராஃபோர்டிடம் கல்வி பயின்றார்கள். யார்க் கோமகன் முடி சூட்டிக் கொண்டதும் பட்டத்துஇளவரசியான எலிஸபெத் நாட்டுவரலாறு சட்டம் ஆகிய துறைகளில் சிறப்புப் பயிற்சி பெற்றார்.

இளமைப் பருவத்திலேயே இளவரசி எலிஸபெத் பொதுப் பணியில் அக்கறை காட்டலானார். 1942-ல் கிரெனேடியர் கார்ட்ஸ் என்ற காலாட் படையில் கர்ணலாக நியமனம் பெற்றார். ஹாக்னி (லண்டன்) யில் நிறுவப்பட்ட எலிஸபெத் அரசி குழந்தைகள் வைத்தியசாலை, குழந்தைகள் கொடுமைத் தடுப்புத் தேசியசங்கம், ராயல் இசைக் கல்லூரி முதலிய ஸ்தாபனங்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். இளவரசி இசையும் நாட்டியமும் நன்கு பயின்றவர்; பியானோ வாசிப்பதில் வல்லவர். நடிப்புத் திறனுள்ளவர்; குதிரை சவாரி செய்வதிலும் பந்தயக் குதிரைகளை வளர்ப்பதிலும் விருப்பமுள்ளவர்.

ஆறாம் ஜியார்ஜ் மன்னர் இதாலியில் சுற்றுப் பயணம் செய்த போது நாட்டை ஆள நிறுவப் பட்ட ராஜாங்க சபையில் ஓர் உறுப்பினராகப் பதினெட்டுப் பிராயத்தை கடந்த இளவரசி நியமனம் பெற்றார்.

இரண்டாம் போர்க் காலத்தில் இளவரசி எலிஸபெத் பிரதேச துணைப் படையில் (ஏ. டி. எஸ்.) ஓர் சிற்றதிகாரியாகப் பணியாற்றினார். மோட்டார் கார்களை ஓட்டுவது, எஞ்சின்களைத் துடைத்துப் பராமரிப்பது இன்னோன்ன பல வேலைகளைச் செய்து பிறருக்கு ஈடாகச் சலியாமல் உழைத்து, மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற்றார். "எதையும் விரைவில் கற்றுக் கொள்ளும் ஆற்றலுள்ளவர். பதட்டமின்றிச் செயலாற்றும் திறன் படைத்தவர். மோட்டார் காரை எச்சரிக்கையுடனும் நன்றாகவும் ஓட்டுவதில் வல்லவர்" என்று அவருக்குத் தரப்பட்ட பயிற்சிச் சான்றிதழில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

போர் முடிந்ததும் இளவரசி மீண்டும் பொதுப்பணியிலீடுபட்டார். பல சங்கங்கள் அவருடைய தலைமையையும் ஆதரவையும் கோரின. 1947-ஆம் ஆண்டில் அரச தம்பதிகள் தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்தபோது இளவரசியும் உடன் சென்றார். தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்தபோது இளவரசி தமது இருபத்தொன்றாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடி தமது வாழ்க்கையை நாட்டுப் பணிக்கு அர்ப்பணித்துக் கொள்வதாக வானொலி மூலம் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.

இளவரசி எலிஸபெத்துக்கும் இளவரசர் பிலிப்புக்கும் திருமணம் நிச்சயம் செய்திருப்பதாக 10—7—1947 அன்று பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து அறிக்கை வெளி வந்தது. உலகெங்குமுள்ள நண்பர்களும் பிரிட்டிஷ் பிரஜைகளும் அந்த நற் செய்தியை வரவேற்றார்கள். "நீண்ட ஆயுளும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வு வாழ நல்லாசி கூறுகிறேன்" என்று காந்தியடிகள் வாழ்த்துரை அனுப்பினார். 1947 நவம்பர் மாதம் 20-ஆம் நாளன்று லண்டனிலுள்ள வெஸ்ட்மின்ஸ்டர் மாதா கோவிலில் இளவரசி எலிசபெத்துக்கும் இளவரசர் பிலிப்புக்கும் திருமணம் நடந்தது. அன்று அரசர் இளவரசருக்கு, 'எடின்பரோ கோமகன், அரசத்திரு' என்ற இருபட்டங்களை வழங்கிக் கௌரவித்தார். காந்தியடிகளும் உலகப் பிரமுகர்களும் பரிசுகள் அனுப்பித் தம்பதிகளை வாழ்த்தினர்.

அரசர் 1952-ஆம் ஆண்டில் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டிருந்தார். ஆனால் உடல் நலிவுற்றதால் திட்டமிட்டபடி பயணம் புறப்பட முடியவில்லை. அவருடைய பிரதிநிதியாக இளவரசி எலிஸபெத்தும், எடின்பரோ கோமகனும் ஜனவரி மாதக் கடைசியில் நைரோபிக்குப் பயணமானார்கள். அரசர் விமான நிலையத்திற்கு வந்து தமது புதல்வியை வழி அனுப்பினார். ஆனால் ஒரு சில தினங்களில் அவருடைய உடல் நிலை மோசமாகி விட்டது. பிப்ரவரி 6-ஆம் நாளன்று அவர் தமது

பூத உடம்பை நீத்தார். இளவரசி எலிஸபெத் அரசப் பதவி ஏற்ருர். 1953 ஜூன் மாதம் 23-ஆம் நாளன்று முடிசூட்டு விழா நடந்தது: காமன் வெல்த் நாடுகளும் பிரதிநிதிகளை அனுப்பி விழாவில் கலந்து கொண்டன. விழா நிகழ்ச்சிகளை வானெலி மூலம் ஒலிபரப்பினுர்கள். காணற்கரிய அந்த விழாவை டெலிவிஷனில் பதிவு செய்ததால் பிரிட்டனிலும் பிறநாடுகளிலும் உள்ளவர்களுக்கு அதைக் கண்டு மகிழும் வாய்ப்புக் கிடைத்தது.

மாட்சிமை பொருந்திய அரசியும் எடின்பரோ கோமகனும் 1953 நவம்பர் முதல் 1954 மே மாதம் வரையில் காமன்வெல்த் பயணம் செய்தார்கள். அவர்கள் பெர்மூடா, ஜமைக்கா, பிஜி, டோங்கா நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, இலங்கை, உகாந்தா, மால்டா, ஜீப்ரால்டர் முதலிய நாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டு நாடு திரும்பியபோது, மக்கள் வரலாறு காணுத முறையில் மகத்தான தோர் வரவேற்புஅளித்து மகிழ்ந்தார்கள்.

அரசியாரும் கோமகனும் 1956-ஆம் ஆண்டு தொடக்கத்தில் நைஜீரியாவுக்கு விஜயம் செய்தார்கள். 1957 ல் கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் சென்ருர்கள். ஸெயிண்ட் லாரன்ஸ் கடல் வழியைத் திறப்பதற்காக, 1959 ல் மீண்டும் கனடாவுக்கு விஜயம் செய்தார்கள். இவ்வாண்டில் இந்தியா—பாகிஸ்தான்-நேபாள நாடுகளுக்கு வந்துள்ள இவர்கள் கணு முதலிய வேறு நாடுகளுக்கும் விஜயம் செய்யத் திட்டமிட்டிருக்கிருர்கள்.

நீலக் கருவிழிகளும் நீண்டு வளைந்தபுருவங்களும் பாந்தமொற்றியும் எடுப்பான தோற்றமுமுள்ள அரசியாருக்குக் குழந்தைகளிடம் தனிப் பற்றுதலுண்டு. அவருக்கு 1948-இல் இளவரசன் சார்லஸூம், 1950-இல் இளவரசி ஆனும், 1960-இல் இளவரசன் ஆன்ட்ரூவும் பிறந்தார்கள். தமது மக்கள் அரண்மனையில் பிறந்தாலும் பொதுமக்களுடன் கலந்து பழகி உலகத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்று அரசியாரும் கோமகனும் விரும்புகிருர்கள். இளவரசன் சார்லஸைக் கல்வி பயிலப் பொதுப் பள்ளியில் சேர்த்திருக்கிருர்கள்.

பிரிட்டிஷ் அரசி காமன்வெல்த் தலைவி என்ற முறையில் காமன்வெல்த் வளர்ச்சியில் தனி அக்கறை காட்டுகிருர். பிரிட்டனுக்கு வரும் காமன்வெல்த் பிரதம மந்திரிகளுக்குப் பேட்டியளித்து காமன்வெல்த் செய்திகளைத்தெரிந்து கொள்கிருர்.

'பொலிவும் தோற்றமும் ஆற்றலும் அறிவும் ஒருங்கே பெற்ற சீமாள். நம் தலை முறையில் வாழும் சிறந்த மனிதன்' என்று யுகோஸ்லாவியா அரசி அலெக்ஸாண்ட்ரா தமது வாழ்க்கைச் சரிதத்தில் தமது நெருங்கிய

உறவினராய எடின்பரோகோமகனைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். எலிசபெத் ராணியின் வாழ்க்கைத் துணைவரான அரசத்திரு பிலிப் இளவரசர், எடின்பரோ கோமகன், நற்பண்புகள் நிறைந்தவர். சிறந்த உழைப்பாளி. அவர் 10—6—1921 அன்று கார்ஃபூ என்ற கிரேக்கத் தீவில் டென்மார்க் அரசருடைய பேரனும் கிரேக்க இளவரசருமான இளவரசர் ஆண்டரூவுக்குத் திருமகனைத் தோன்றினார். எடின்பரோ கோமகனுடைய தாய், இளவரசி ஆலிஸ் விக்டோரியா மகாராணியின் கொள் பேத்திகளில் ஒருவராகும். இந்திய-பாக்கிஸ்தான் அரசுரிமையை 1947-ல் மாற்றிக் கொடுத்தவரான இந்தியாவின் கடைசி வைஸ்ராய் மவுண்ட் பாட்டன் பிரபுதான் இவருடைய தாய் மாமன்.

எடின்பரோ கோமகன் இளமைப் பருவத்திலிருந்தே இங்கிலாந்தில் வசித்து வருகிறார் சீமிலுள்ள தொடக்கப் பள்ளியிலும், ஜர்மனியிலும், ஸ்காட்லாந்தில் கார்டன் ஸ்டோனிலுள்ள டாக்டர் ஹான் பள்ளியிலும் கல்வி பயின்ற பிறகு 1939-ல் அவர் கடற் படையில் சேர்ந்தார். போர்க் காலத்தில் அவர் வாலியண்ட், வாலெஸ், வெல்ப் முதலிய போர்க் கலங்களில் பல்வேறு பதவிகளில் பணியாற்றினார். தென் கிழக்கு ஆசியாவில் நேசப் படைகளின் பிரதான தளபதியாகப் பணியாற்றிய மவுண்ட்பாட்டன் பிரபுவின் மெய்க்காப்பாளர்களில் ஒருவராகச் சிறிது காலம் பணியாற்றினார்.

1947-ல் இளவரசர் பிலிப்புக்கும் இளவரசி எலிஸபெத்துக்கும் திருமணம் நடந்தது. திருமண நன்னாளன்று, அரசர் இளவரசருக்கு, 'எடின்பரோ கோமகன்,' 'அரசத்திரு' என்ற பட்டங்களை வழங்கிக் கௌரவித்தார்.

எடின்பரோ கோமகன் முற்போக்குச் சிந்தனையும் மனிதாபிமானமும் உள்ளவர்; விஞ்ஞான வளர்ச்சியில் அக்கறையுள்ளவர். 1951-ஆம் ஆண்டில் அவர் பிரிட்டிஷ் விஞ்ஞான வளர்ச்சிச் சங்கத்தின் ஆண்டுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, அறிஞர்கள் பாராட்டும் முறையில் சிறந்தமைத்தோர் உரையாற்றினார். அவர் பிரிட்டனிலுள்ள பல்வேறு தொழிற்சாலைகளையும் சுரங்கங்களையும் பார்வையிட்டிருக்கிறார். தொழிலாளர் நலனுக்கு உழைக்கும் அவர் தொழில்நிலை-உறவு சம்பந்தமான பிரச்னைகளை ஆராய்வதற்காக 1956-ஆம் ஆண்டில் ஆக்ஸ்போர்ட்டில் ஓர் மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்தார். பிரிட்டனிலும் காமன்வெல்த்திலுமுள்ள அறிஞர்கள் பலர் இந்த மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

எடின்பரோ கோமகன் அரச குடும்பத்தில் பிறந்தாலும் மக்களுடன் நெருங்கிப் பழகுகிறார்.

அவர் தொழிற்சாலையில் பணியாற்றி யிருக்கிறார். 'பாய்ஸ்-டிரிம்பர்' சான்றிதழ் பெற்ற ஒரே ஐரோப்பிய இளவரசர் அவர் ஒருவர் தான். தமது தந்தையின் முத்திரை மோதிரம், முடிசூட்டு விழா நிகழ்ச்சி நிரல் போன்ற அரும் பொருள்களுடன் அந்தச் சான்றிதழையும் சேர்த்துப் போற்றி வருகிறார் அவர்.

எடின்பரோ கோமகன் பல் வேறு சங்கங்களுக்குத் தலைவராக வும் புரவலராகவும் பொறுப் பேற்றுப் பணியாற்றி வருகிறார். கிரிக்கெட், போலோ விளையாட் டுகளை விளையாடுவதில் விருப்ப முள்ள அவர் படகோட்டுவதிலும் குதிரை சவாரி செய்வதிலும் வல்லவர். வீரமும் துணிவும் விஞ்ஞான நோக்குமுள்ள அவர், இளைஞர் நலப்பணியில் அக்கறை யுள்ளவர்.

பல பல்கலைக் கழகங்கள், எடின் பரோ கோமகனுக்குப் பட்டங் களை வழங்கிக் கௌரவித்திருக் கின்றன. அவர், வேல்ஸ், எடின் பரோ பல்கலைக் கழகங்களின் வேந்தர் பதவியை ஏற்றிருக்கிறார் மாட்சி பொருந்திய அரசி அவர் கள் 1957-ல் எடின்பரோ கோம கனை இங்கிலாந்து இளவரசர் எனப் பிரகடனப் படுத்தினார்.

தங்களுடைய குழந்தைகள், சம வயதுடையவர்களுடன் கலந்து பழக வேண்டும். உலகு டன் ஒட்டி வாழ்ந்து அனுபவம் பெற வேண்டுமென்று அரசியும் கோமகனும் விரும்பு கிறார்கள். **'முஸ்லிம் முரசு'**

உண்மை வழி

மா மலையழகன்

"படித்ததனால் அறிவு பெற்றோர்" என்ற இசை.
உண்மைவழி நடப்பவரே உலகினில் மேலோர்—உண்மை
எண்ணாத மனமுடைய யாவரும் கீழோர்! (உண்)
படிப்புடனே பணமிருந்தால் மட்டும் போதுமா?—நல்ல
பண்புகளும் இல்லையெனில் வாழ்வு சிறக்குமா? (உண்)
துயரடையப் பயந்துமனம் பொய்யுரைக்கத் துணிவதா?
உடல்வளர்க்கப் பொருள் கிடைப்ப தாலுண்மையை மறைப்பதா?
தயவுவேண்டும் என்பதனால் கயவரொடு சேர்வதா?
தரணியெங்கும் போற்றும் தமிழ்ப்பண்பும் மாய்ந்துபோவதா (உண்)
கள்ளமில்லாக் காந்தியரும் வாழ்ந்த தெந்நெறி?—மக்கள்
கவலைதீர்த்து சாந்திதரும் உண்மை செந்நெறி!
உள்ளமெல்லாம் உவக்கும் வாய்மை திருக்குறள் நெறி!—இது
உண்மைவழி உலகத்திற்கே என்றுநீ அறி! (உண்)

சிறுகதை :—

புரவி

தாமரைக் கண்ணன்

முத்து:

இரவு உணவு முடிந்தது. சற்று உலவிவிட்டு வந்துபடுக்கையில் படுத்தேன். கொஞ்ச நேரம் கழித்து என் மனைவி வந்து என் அருகில் படுத்தாள்.

என் எண்ணம் நண்பன் அரசுவைப் பற்றி ஓடியது. அரசு— என் நண்பன்! நண்பன் என்றால், தேவைப்படும்போது மட்டும் தேவாமிர்தமாகப் பயன்படுத்திக் கொண்டு, மற்ற நேரங்களில் சிறு துரும்புக்குச் சமானமாகத் தூக்கி எறிந்து போகிறார்களே சில 'நண்பர்கள்'—அப்படிப்பட்ட நண்பர்களைச் சேர்ந்தவனல்ல. எங்கள் நட்பு இருநிலம் பிளக்க வேர் ஊன்றிய நிலையான நட்பு.

அரசு — அழகாக எழுதுவான்! அணி நயத்தோடு கூட்டங்களில் பேசுவான்! நாடகங்களில் குணச்சித்திரப் பாத்திரங்களில் தோன்றி அழகுற நடிப்பான்! சிக்கல் மிகுந்த பிரச்சினைகளையும் தெளிவாக விளக்குவான்! பண்பும் பகுத்தறிவும் நிரம்பிய அவனுக்கு அழகும் அறிவும் மிகுந்த பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று நானும் அவன் பெற்றோர்களும் எண்ணிக் கொண்டிருந்தோம் ... ஆமாம்......அவனுக் கேற்ற குலக் கொடி கிடைக்கவேண்டுமே...

எண்ண வெளியில் மிதந்து கொண்டிருந்தேன்.

"என்னுங்க தூங்குறீர்களா"—என் மனைவி கேட்டுக் கொண்டே என் பக்கம் ஒருக்களித்துப் படுத்தாள். "தூக்கம் வரவில்லை" என்றேன். அவள் படுத்தவாறே கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி என் அருகில் வந்தாள். "தூரமாகப்படு — தொந்தரவு கொடுக்காதே" என்றேன், நான். அவள் நான் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலேயே, என் முகத்தை அவள் பக்கம் திருப்பி, 'உங்கள் நண்பர் அரசு உங்களிடம் ஏதாவது சொன்னாரா?' என்று கேட்டாள். இல்லை என்பதற்கடையாளமாகத் தலையை அசைத்தேன்.

"அவரைப் பற்றி ஒன்று சொல்கிறேன். அருகே வாருங்கள்."

அப்படி என்ன சொல்லப் போகிறாள்? அவள் அருகே

ஒட்டிப் படுத்தேன். அவள் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு விஷயத்தைச் சொன்னாள். என் நெஞ்சு வெடித்துவிடும் போல் இருந்தது. "கழுதை கழுதை! களங்கமில்லா அவனையா அப்படிச் சொன்னாய்" என்று 'பளீரென்று' அவள் கன்னத்தில் அறைந்து விட்டேன். அவள் விம்மிக் கொண்டே கன்னத்தைத் தன் மென் கரத்தால் பிடித்துக்கொண்டு அப்படியே உறங்கிவிட்டாள். எனக்கு...உறக்கமே வரவில்லை.

"அரசு அப்படிச் செய்திருப்பானா...அப்படிச் செய்திருப்பானா?—கேள்விக்" கணைகள் என் மூளையைக் குடைந்தன.

ஒருவேளை அது உண்மையாக இருந்தால்...ஆம்...இருந்தால்...

நேற்று மாலைகூட நானும் அவனும் ஆற்றங்கரைக்குச் சென்றோம். அமுதமழை பொழியும் அழகு நிலவொளியில் வட்டப்பாறை மீது அமர்ந்து நெடு நேரம் பேசிவிட்டுத் திரும்பினோம். அப்போது எனக்குத் தெரியாதே, உள்ளத்தில் ஒன்று வைத்துப் புறத்தில் ஒன்று பேசும் நயவஞ்சகனாக அவன் மாறிவிட்டான் என்பது.

ம்...'அது' பொய்யாக இருந்தால்...

என் மனம் உளைந்தது. வேதனை — வேதனை— தாங்க முடியாத வேதனை என் இதயத்தைத் துளைத்தது.

அளவு கடந்த வேதனை தாலாட்டுப்பாட என் விழிகள் தாமாகவே உறக்கத்தைத் தழுவிக் கொண்டன.

விடிந்ததும் என் மனைவி என்னை எழுப்பினாள். எழுந்து வயல்வெளிப்பக்கம் போனேன். ஒரு பெரியவர் என் எதிரே வந்தார் "என்னப்பா முத்து—நல்லவங்களுக்குப் பிள்ளையா பிறந்து அரசு இப்படி நடக்கிறானே...நீயாவது அவனுக்குச் சொல்லக் கூடாதா?" என்று, இரவு என் மனைவி சொன்ன விஷயத்தையே சொன்னார். என் மனம் குழம்பியது. இன்னொருவர் வந்தார்...அவரும் அதையேதான் கூறினார். குளக்கரையில் ... கிணற்றடியில் பெண்களும் அதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். அப்படியானால் என் மனைவி கூறியது அனைத்தும் உண்மையா? அரசு அந்தக் காரியத்தைச் செய்திருப்பானா? அடப்பாவி... துரோகி...

சேச்சே...அவன் நடத்தை நினைவுக்கு வருகிறது—வாயைக் குமட்டுகிறது! இதயத்தில் கசப்பான எண்ணங்கள் தோன்றுகின்றன!

அன்று மதியம் அவனே என் வீட்டிற்கு வந்தான், என்னால் இதய உணர்ச்சிகளை அடக்கி வைக்க முடியவில்லை. 'என்னடா விஷயம்' என்று அவனையே கேட்டேன். அவன்தான் எத்தனையோ கதைகளை எழுதி எழு

திப் பழக்கப்பட்டவனாயிற்றே! 'அதெல்லாம் ஒன்றுமில்லை — நடந்தது இதுதான்' என்று ஒரு கதையையே சொல்லிவிட்டான். முட்டாள்! நானா ஏமாந்துவிடுவேன். 'எழுந்து வெளியே போடா' என்று கத்தினேன். அவன் என் கைகளைப் பிடித்துக் கொண்டு, 'முத்து நீ என்னை நம்புகிறாயா—இல்லையா?' என்று கண் கலங்கிக் கேட்டான். நான் பேசாமல் எழுந்து அப்பால் சென்று விட்டேன். அவனும் 'விருட்டென்று' எழுந்துபோய்விட்டான். அவன் சென்ற நிலையையும் வேகத்தையும் கண்டபோது ஏனோ தெரியவில்லை ... என் இதயத்தில் 'சுருக்' கென்றது. நான் உடனே சமாளித்துக் கொண்டேன்.

போகட்டுமே! அப்படிப்பட்ட அயோக்கிய நண்பர்கள் எனக்குத் தேவையில்லை!!

அரசு :

என்னைப் போன்றவர் நட்பே வேண்டாம் என்றார், முத்து. 'நீ எதிர்காலத் தமிழகத்தின் தலைவன்—தமிழின் துணைவன்' என்றெல்லாம் என்னைப் புகழ்ந்தவர் தான், அவர். எட்டு மணிக்கு நடக்க வேண்டிய தன் திருமணத்தை, நான் காலங்கடந்து சென்றதால் நான்கு மணிநேரம் தள்ளிப் போட்டு திருமணத்திற்கு வந்தவர்கள் திகைக்கும்படி எங்கள் நட்பை எடுத்துக் காட்டியவர் தான். அவரே சொல்கிறார் 'என் நட்பு வேண்டாம்' என்று. அட கடவுளே! இப்படி ஒரு சூழ்நிலையா—அதுவும் எங்கள் வாழ்விலா?

நான் எழுதிய 'பனித்திரை' நாடகத்தை நடிப்பதற்காக 'பாக்கம்' சென்று இரண்டு மாதங்கள் தங்கினேன். வெற்றிவேலர் என்பவர் வீட்டில் உணவுக்கும் நான் தங்குவதற்கும் ஏற்பாடு செய்திருந்தனர் நண்பர்கள்! அவர் மகள் ராதா கோடை விடுமுறையில் வீட்டிற்கு வந்திருந்தாள். அவள் தான் நாடகத்திலும் முக்கிய பாகத்தை ஏற்றிருந்தாள்!

வெற்றி வேலர் வழக்கம் போல வியாபார விஷயமாக வெளியூர் போயிருந்தார். நாடகத்துக்கு இரண்டு நாட்கள் இருந்தன. விளம்பரத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு—இரவு மணி பத்து இருக்கும்—உணவுக்குச் சென்றேன். நான் சென்றபோது ராதா மனக்கவலையோடு அமர்ந்திருந்தாள். வாடிய கொடியைப் போல இருந்த அவள் சோறு போட்டாள். நான் அதில் பாதி மட்டும் உண்டேன்.

எனக்காக என்றால் தனி எழிலோடு வேலை செய்யும் அவள் ஏன் இப்படிக் களையிழந்து இருக்கிறாள் என்று எண்ணத்தோடு திண்ணையில் அமர்ந்திருந்தேன்.

“என்னை மன்னித்து விடுங்கள்—நான் நாடகத்தில் நடிக்கப் போவதில்லை” என்று அவள் கூறிக் கொண்டே என்னிடம்

வந்தாள். தலையில் இடி விழுந்ததைப் போன்ற அதிர்ச்சி ஏற்பட்டது, எனக்கு. "விளம்பரமெல்லாம் செய்து விட்டோமே—ஏன் திடீரென்று இப்படிச் சொல்கிறாய்" என்று பதட்டத்துடன் கேட்டேன். 'காட்டுத்துரை நாடகத்தில் நடித்தால் நான் நடிக்கமாட்டேன். அவன் நாடகத்தில் மட்டுமல்ல—நமது உண்மை வாழ்க்கையிலும் வில்லன் வேலை செய்ய ஆரம்பித்து விட்டான்' என்றாள் ஆத்திரத்தோடு. எவ்வளவோ சமாதானம் கூறினேன். அவள் கேட்கவில்லை!

காட்டுத்துரை—என் சமீபத்திய நண்பன். அவன் அவளிடம் தவறாக நடந்து கொண்டானா! 'நம் இருவர் வாழ்க்கையிலும்' என்று சொல்கிறாளே இராதா—அதற்கு என்ன பொருள்?

ஆண்களைப் போல அர்த்தமற்ற சொற்களை எப்போதும் பேச மாட்டார்கள் பெண்கள்! பெண்மையின் ஒவ்வொரு சிறிய செய்கையிலும் பேச்சிலும் ஏதாவது நுண்ணிய பொருள் பொதிந்திருக்குமே...

நாடகத்தில் நானும் அவளும் காதலர்கள்—அந்த நாடக நிலையையே வாழ்க்கையிலும் எதிர்பார்க்கிறாளா...அதாவது, என்னைப் போலவே!

இனிமையான எண்ணங்களுடன் நினைவில் ஆழ்ந்தவாறு கட்டிலில் படுத்திருந்தேன். விளக்கின் வெளிச்சம் மங்கலாக இருந்தது.

காட்டுத்துரை ஏன் எங்களிடையே குறுக்கிடுகிறான்? இவள் நடிப்பதற்கு மறுக்கிறாளே!

என் மனம் குழம்பியது. இராதா வந்து என் அருகில் அமர்ந்தாள். ஒளி வீசும் அவளுடைய குவளைக் கண்களில் நீர் மல்கியது. அந்த அன்பு நெஞ்சம் என்ன நினைத்ததோ?

"நான் நாடகத்தில் நடிக்கிறேன்"—தன் பலாச்சுளை இதழ் திறந்து கூறினாள்.

"அப்பாடா..." என் மனச்சுமை இறங்கியது. அவளுடைய கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்தேன்.

"எங்கள் அப்பா வந்தவுடனே..." நாணத்தால் அவள் கண்ணாடிக் கன்னங்களில் செந்நிறம் படர்ந்தது. நான் குறிப்புணர்ந்தேன். "நம் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யலாம். நீ போய் படுத்துக்கொள், ராதா." ஆதங்கத்தோடு கூறினேன். அவள் மார்பகம் விம்மித்தணிந்தது. வெப்பமான நெட்டுயிர்ப்பொன்று அதனின்றும் வெளியேறியது. மெதுவாக எழுந்து சென்றாள். அவள் நடையழகைக் கண்ட என் கண்கள் குளிர்ந்தன. எவ்வித சலனமுமின்றி கண்ணயர்ந்தேன்.

நாடகம் வெற்றியுடன் முடிந்தது. நான் எங்கள் ஊருக்கு வந்திருந்தேன். ராதாவைப்

பற்றி நண்பர் முத்துவிடமும் வீட்டிலும் சொல்வதற்குத் தக்க சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருந்தேன். ஒரு வாரம் கழிந்தது. இடையில் ஒருநாள் ராதாவைப் பார்த்து வரலாம் என்று பாக்கத்திற்குப் போனேன். அவளைப் பார்க்கவே முடியவில்லை. அவள் தந்தையும் என்னிடம் பழையபடி அன்புடன் நடந்து கொள்ளவில்லை. எனக்கு இந்த மாறுதல் ஆச்சரியமாக இருந்தது. நண்பர்களும் என்னைக் கண்டும் காணாதவர்களைப் போல் நடந்து கொண்டனர். 'ஏன் இப்படி...? ஏன் இப்படி...?

மனக்குழப்பத்துடன் ஊருக்கு வந்தேன். வழியில் என்னைப் பார்த்த கிழவர், 'ஏண்டா அரசு! என்னிடம் கூட சொல்லாமல் கல்யாணம் செய்து கிட்டே' என்றார் கேலியாக. இன்னொரு நண்பர் வந்தார். 'குழந்தை எப்போது' என்று என்னைக் கேட்டார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

நண்பர் முத்துவின் வீட்டிற்குப் போனேன். நான் எதை அவரிடம் சொல்ல வேண்டுமென்று சென்றேனோ, அதையே என்னிடம் கேட்டார். 'நான் பாக்கத்தில் யாரோ ஒரு பெண்ணைக் கற்பழித்து விட்டேனாம். அவள் கருத்தரித்து விட்டாளாம். நான் அவளைக் கைவிட்டு விட்டு ஓடி வந்து விட்டேனாம்' 'இதெல்லாம் உண்மைதானே?' என்று கேட்டார் அதைக் கேட்டபோது எனக்குச் சிரிப்பு வந்தது. நான் நடந்ததை அப்படியே அவரிடம் சொன்னேன். அவர் நம்பவில்லை. கடுமையாகப் பேசினார். 'பிறகு, சமாதானமாக அவருக்குச் சொல்லலாம்' என்று எண்ணிக் கொண்டே வந்துவிட்டேன். அன்று முதல் அவர் என்னிடம் பேசுவதேயில்லை!

யாரோ ஒருவரிடம் சொன்னாராம், 'அரசு—ஒரு அயோக்கியன்—மேடையில் பேசுவான்—ஏட்டில் எழுதுவான்—தன்னளவில் நடக்கமாட்டான்' என்று.

முத்து:

ஆமாம்: இப்போது கூடத் தான் சொல்கிறேன். அரசு பேசுவான், எழுதுவான். அதன்படி நடக்கமாட்டான். நான் எவ்வளவோ கேட்டேன். 'உண்மையைச் சொல்லடா' என்று கெஞ்சினேன். அவன் என்னிடம் உண்மையைச் சொல்லியிருந்தால், எத்தனை சாதியும் மதமும் பணமும் எதிர்த்தாலும் தயங்க மாட்டேன்—நானே முன்னின்று அவர்கள் திருமணத்தை நடத்தியிருப்பேன். ஆனால், அவனோ..

'ராதாவைத்தான் காதலித்தேன்—வேறு ஒன்றும் நடக்கவில்லை' என்று கதை யளக்கிறான்.

வெற்றிவேலரிடம் ஒருநாள் சென்றிருந்தேன். அவரும் கூறினார், 'அவர்கள் இருவரும் நெருங்கிப் பழகியது உண்மை'

யென்று, ஒரு கடிதத்தை என்னிடம் கொடுத்தார். அரசுவின் கையெழுத்தே தான்!

"என் இன்னுயிர் ராதா! நம் காதல், கதைகளில் வரும் காதலாகப் போய்விடாது. என் உலகம் நீ, அந்த உலகத்தில் தான் என் வாழ்வு! ராதா! நீ எப்போதும் என்னுடனேயே இருக்கிறாய். படுத்தால் பக்கத்தில் படுக்கிறாய். படித்தால் என் தோள்களின்மீது சாய்ந்து கொண்டு அதைக் கேட்கிறாய். சிரித்தால் சிரிக்கிறாய். சோர்ந்தால், அன்பு முத்தங்கொடுத்து சோகந் தீர்க்கிறாய்...நீ..."

கடிதம் இந்தத் தோரணையில் சென்றது. அந்தப் பாழும் கடிதத்தை மேலும் படிக்கவா வேண்டும்? வெற்றிவேலர் மற்றும் சில புகைப்படங்களைக் கொடுத்தார். ராதாவும் அரசுவும் களவில் ஒழுகியபோது மறைந்திருந்து எடுத்த படங்கள்! குளக்கரையிலே...ஆற்றங்கரையிலே இருக்கும் போது எடுத்தவை — இருவரும் கை கோத்துக் கொண்டிருக்கும் காட்சி — அவள் நடனத்தை அவன் ரசிக்கும் காட்சி...

சே! இவ்வளவு நடந்திருக்கின்றன. ஊர் முழுவதும் பேசிக்கொள்கிறது. வெற்றிவேலரும் சந்தேகப்படுகிறார். அவனே எழுதிய கடிதம் இருக்கிறது—புகைப்படங்கள் இருக்கின்றன. ஒரு தடவை அவர்கள் இருவரையும் சினிமாக் கொட்டகையில் பார்த்ததாகக்கூடச் சொல்கிறார்கள். இவ்வளவு இருந்தும்—நான் ஏதாவது கேட்டால் அவன் வெறி பிடித்தவனைப் போல பார்க்கிறான். 'என்னை நம்பு' என்கிறான்!

அந்தக் கடிதத்தையும் புகைப்படங்களையும் காட்டியாவது அவனைக் கேட்கலாம் என்று அரசு வீட்டிற்குச் சென்றேன். இரவு பத்து மணிக்கு மேல் இருக்கும். எங்கும் ஓரே இருள்! எங்கள் தெருக்கோடியைத் திரும்பியபோது யாரோ ஒருவன் ஓடிவந்து, 'என்னங்க—இங்கே முத்து என்பவர் வீடு, எதுங்க' என்று கேட்டான். 'நான்தான்முத்து. நீ எங்கிருந்து வருகிறாய்' என்று கேட்டேன்.

'பாக்கத்திலிருந்து வரேனுங்க. ராதாவை இன்னிக்கு விளக்கு வச்சதிலிருந்து காணோம். இங்கே அரசு இருக்காரான்னு வெற்றிவேலர் பார்த்துகிட்டு வரச் சொன்னாரு' என்றான். என் தலை அவமானத்தால் தாழ்ந்தது.

அந்த ஆளையும் அழைத்துக் கொண்டு அரசு வீட்டிற்குப் போனேன். நாங்கள் போனபோது அரசு வீட்டில் இல்லை. அவன் தந்தை என்னிடம் பேசவும் வெட்கினார். 'நான்கு மணிக்கு வெளியில் போனவன் இன்னும் வரவில்லையேப்பா, முத்து' என்று அவன் தாயார் கவலைப்பட்டார். "எங்கேயாவது நண்பர்கள் வீட்டிற்குப் போயிருப்

பான்—வந்துவிடுவான்' என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி விட்டுக் கிளம்பினேன்.

நானும் அந்தப் பாக்கத்து ஆளும் தெருக் கோடியிலிருந்த விளக்குக் கம்பத்தருகே வந்து கொண்டிருந்தபோது, அரசு தலைவிரி கோலமாக எதிரே வந்தான். அவன் முகம் களையிழந்து வெளிறிக் கிடந்தது. இரண்டு நாட்களில் ஆளே உருமாறியிருந்தான்.

அவன், "முத்து" என்று என்னைக் கட்டிக்கொண்டு குழந்தையைப்போல் தேம்பினான். எல்லோருடனும் நானும் கூடிக் கொண்டு அவனைப் பழிப்பதற்காக அவன் அழுதானா? உணர்ச்சி யொத்த நட்பின் எழுச்சியா அது?

அந்தப் புகைப் படங்களை அவனுக்குக் காட்டுவதற்காக என் சட்டைப்பையில் கையை விட்டேன். அவற்றைக் காண வில்லை. ஒரு வேளை அவன் வீட்டிற்குச் சென்றேனே அங்கே விட்டுவிட்டேனா. அய்யோ! இப்போதே மனம் வருந்திக் கொண்டிருக்கும் அவன் பெற்றோர் அவற்றைப் பார்த்து விட்டால் வேதனையால் துடித்துப் போவார்களே!

"ராதா எங்கே அரசு?"

"என்னைக் கேட்கிறாயே; முத்து! நான் அவளைப் பார்க்கவே இல்லையே!"

அவன் சொல்லி முடிக்க வில்லை. அதற்குள் யாரோ ஒருவன் அங்கே ஓடிவந்தான். 'அவளை ஏனுங்க கேக்கறீங்க. குடி முழுக வச்சிட்டாருங்க அவரு! ராதாவை மாந்தோப்பிலே தூக்கு மாட்டியிருந்தாங்க' என்றான், அவன். நாங்கள் திடுக்கிட்டோம்! 'வாங்க அண்ணே! ஆக வேண்டியதை நாம் போய்ப் பார்ப்போம்' என்று முதலில் வந்தவனை அழைத்துக்கொண்டு ஓடினான், அவன்!

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இதென்ன நாடகத்தைப் போல அடுத்தடுத்து ஒவ்வொரு திருப்பம்! இதையெல்லாம் பார்த்துத்தான் 'உலகம் நாடகமேடை—வாழ்க்கை ஒரு நாடகம்' என்று அறிஞர்கள் கூறுகிறார்களா? 'உண்மை கற்பனையைவிடப் பயங்கரமானது—ஆச்சரியமானது—வேகமான கிளர்ச்சியுடையது' என்ற ஆங்கிலப் பழமொழி இதனால்தான் வந்ததா?

"ராதா—ராதா" என்ற வேதனைக் குரல் வானைப் பிளந்தது. திரும்பிப் பார்த்தேன். அரசு 'ராதா—ராதா' என்று கத்திக் கொண்டே இருளைக் கிழித்துக் கொண்டு ஓடினான்.

அரசு :

இருளைக் கிழித்துக் கொண்டு நான் ஓடவில்லை; நான் ஓடிய பக்கமெல்லாம்—என் கால்கள் ஓடிய பக்கமெல்லாம் இருள் விலகி நின்று வழி விட்டது. நான் ஓடி

னேன் — ஓடினேன் — கண் — மண் தெரியாமல், கல் — முள் என்று தெரியாமல் ஓடினேன்.

ஊர் மக்கள் என்னையும் ராதாவையும் சேர்த்து வைத்து ஏன் இப்படி சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசினார்கள். எல்லோரும் ஓர் இரவில் ஒரே மாதிரியான கெட்ட கனவைக் கண்டுவிட்டு பிதற்றுகிறார்களா? தொடர்பில்லாத ஓர் புதிய உலகில் வந்து விட்டதைப் போலல்லவா பேசுகிறார்கள். வேடிக்கையான கிராம மக்களைக் கொண்ட விசித்திரமான சமுதாய அமைப்பு!

அன்று மாலை நான்கு மணிக்கு ஈரோட்டாரிடம் சென்று எல்லாவற்றையும் கூறினேன். அவர் பொறுமையாகக் கேட்ட பின், 'யாராவது எதையாவது சொல்லட்டும். எதற்கும் அஞ்சாமல் இரு. நேராக வெற்றிவேலிடம் நீயே போய் உண்மையைப் பல தடவை எடுத்துச் சொல். அவர் முதலில் மனம் நொந்து அருவெறுப்பாகப் பேசினாலும் நீ தளர்ச்சியடையாதே. பொறுமையுடனும் உறுதியுடனும் தன்னம்பிக்கையோடு போராடினால் எந்தக் காரியத்திலும் வெற்றி கிட்டும்' என்று சொல்லியனுப்பினார்.

பாதி வழியிலேயே-அய்யோ! ராதா போய்விட்டாளாமே, என் உயிர்நாடியே ஒரு கணம் நின்று விட்டது!

ராதா! மாசிலாமணி...மங்கையர் திலகம்...இன்பச் சுரங்கம்...இளந் தென்றல்...வான்நிலா...வண்டமிழ்த்தேன்...

அய்யோ! அந்த முத்தமிழின் மூச்சு என் உயிரையும் எடுத்துக் கொண்டு ஓடி விட்டதே. நடைப்பிணம் என்பார்களே—அப்படித்தான் ஆனேன், அந்த நகராப் பிணத்தைக் காண ஓடினேன்! 'ஏன் இப்படிச் செய்து கொண்டாள்'—என் தொண்டை வரண்டு போகும்வரை கூவிக்கொண்டே ஓடினேன்:

அவளை ஒரு அறையில் வைத்திருந்தனர். யாரும் பார்க்கக் கூடாதாம். கதவை அடைத்திருந்தார்கள். திண்ணையில் பலர் அமர்ந்தனர். "என்னப்பா அரசு! என்ன இப்படி அலங்கோலமாக வந்திருக்கிறாய். வா. அந்த வீட்டிற்குப் போகலாம்" என்று யாரோ ஒருவர் என்னை அன்புடன் ஒரு வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

அது பெரிய வீடு. என்னை ஒரு சிறிய அறையில் அமரச் செய்தார். சன்னல்களையும் கதவுகளையும் மூடினார். ஒரு தடியைக் கையில் எடுத்துக் கொண்டார். அவர் ஒரு போலிஸ்காரராம். வேலையிலிருந்து ஓய்வு பெற்றவராம்.

"அடி வாங்காம சொல்லு. ராதாவைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லிக்கற்பழிச்சது உண்மைதானே?" என்றார்.

நான் வாயடைத்துப் போனேன். "சொல்லுடா, அவ

முழுகி ரெண்டு மாசமாச்சாமே." —எனக்குப் பேசவே தெரியவில்லை.

"அவளுக்குக் கடிதம் எழுதியதும், அவள் கையைப் பிடிச்சதும் இந்தக் கைகள் தானே?"—என் கைகளில் லட்டித்தடியால் ஓங்கி அடித்தார். என் கண்களுக்கு உலகமே தலைகீழாகச் சுற்றியது. "கண்ட கண்ட இடங்களுக்கு அவளை இழுத்துப் போனது இந்தக் கால்கள் தானே?"—என் கால்களில் மாறி மாறி அடித்தார். நான் அடியற்ற பனையாகச் சாய்ந்தேன். "இன்பச் சுரங்கமே—தென்றலே ... வானிலவே...வண்டமிழ்த் தேனே...என்றெல்லாம் கொஞ்சியது இந்த வாய்தானே" என் முகத்திலும் வாயிலும் ஓங்கி ஓங்கிக் குத்தினார். மூக்கிலிருந்து 'சதக்' கென்று இரத்தம் வந்தது. இரண்டு பற்கள் விழுந்தன. வாயிலிருந்து 'குபீர் — குபீரென்று' இரத்தம் பொங்கி வழிந்தது. வலி பொறுக்க முடியாமல் வாயை மூடினேன். வாயில் குழம்பிய இரத்தத்தின் சக்தி நாசி வழியாகச் சொட்டியது. திணறினேன். நான் இறந்து போனதாகவே எண்ணினேன். என் கண்களுக்கு எதுவுமே தெரியவில்லை. உடலை அசைக்கவே முடியவில்லை. கால்களும் கைகளும் வீங்கிப்போய் அப்படியே கிடந்தன. எந்த உணர்ச்சியும் இன்றிக்கண்கள் தாமாகவே மூடிக் கொண்டன;

கண்ணைத் திறந்தபோது முத்து எதிரிலிருந்தார். உடல் அசைய முடியாத நிலையில் கிடந்தது. ரணமான இடங்களில் எதையோ கட்டி வைத்திருந்தனர். வாயில் உறைந்துபோன இரத்தம் நாற்றமடித்தது. முத்து கண்ணீர் வடித்தார். "ஆ... ஆ..." என்றேன். "பேசாமல் தூங்கு, அரசு" என்றார், நெஞ்சம் குமுறிக் கொண்டே

அம்மாவும் அப்பாவும் வந்தனர். இருவரும் கதறினர். "ஒரே பிள்ளை ..உன் கதி இப்படியா... யாருடா இந்த அநியாயத்தைச் செய்தவர்கள்"? அம்மா அழுதார்கள். வீடே அதிர்ந்தது!

ஒரு வாரம் கழித்தது. கோலையூன்றி எழுந்து நடந்தேன். குளம் வரை சென்று வருவேன். பழைய பல்லவி தான்...ஆண்களும் கூடிக் கூடிப் பேசினர்...என் காதில் விழும்படியாகவே பேசினர்...

"நத்தை வயிற்றில் முத்து பிறக்கும் என்பார்கள். ஆனால் இப்போதெல்லாம் முத்து வயிற்றில் நத்தை பிறக்கிறது,"

"நொண்டி நொண்டி வாறுனே. அடிச்சவன் அவன் காலையே வெட்டியிருக்கக் கூடாது."

"எங்கே போகலாம்னு ஆசை காட்டி அழைச்சானோ? அவ என்னொட்டம் ஒரு இளிச்ச வாய்க்காரி. சந்தோஷமாபோயிருப்பா சந்தடி பண்ணாமே தூக்குமாட்டிட்டான்!"

"உயிர் போகும்போது எவ்வளவு துடிச்சிருப்பா. அவளைக்

கெடுத்தது மில்லாமே கொன்றே போட்டுட்டானே, கொலை பாதகன்.''

''இவனையும் துடிக்கத் துடிக்க நாலு சந்தி நடுவிலே தூக்கு மாட்டணும். அப்பதான் இருக்கிற வாலிபப் பசங்களுக்கெல்லாம் புத்தி வரும்.''

''இப்பக்கூட ஒத்துக்கலையாமே. சத்தியம் பன்றுணுமே நம்புன்னு சொல்றுணுமே.''

இந்த மாதிரி ஆயிரம் ஆயிரம் ஈட்டிகளைக் காய்ச்சிக் காய்ச்சி நொந்து கிடந்த என் இதயத்தில் பாய்ச்சினர். மண்டையில் சுற்றிச் சுற்றிக் கோடாரியால் பிளந்தனர். கூரிய வாளால் உடலை அணுவணுவாகச் சிதைத்தனர். மனிதன் எதற்காக வாழ்வது, மானம் போன பின்பும்!

குழந்தைகளை ஆசையுடன் பார்ப்பேன். என்னுடைய விகாரமான முகத்தைக் கண்டு ஓடி விடுவர், அவர்கள். அன்ன நடை போட்டு அருந்தமிழில் பேசும் மழலையைக் கேட்க விழைவேன். ஆனால், அவர்கள், 'நாங்க உன்னிடம் வரமாட்டோம். நீ தூக்கிலே போட்டுடுவே' என்று கொச்சையாகப் பேசுவதைக் கேட்டுத் தூண்டிற் புழுவாகத் துடிப்பேன். என் நெஞ்சம் சுக்கு நூறுக வெடித்துவிடும். மிருகத்தைவிட இழிவாகக் கருதப்படும் நான் வாழவா வேண்டும்?

நேராக முத்துவிடம் சென்றேன். ''நீயாவது என்னை நம்புகிருயா—இல்லையா?'' என்று முடிவாகக் கேட்டேன். அவர் அமைதியாக இருந்தார். மறுமுறையும் கேட்டேன். அதே அமைதி! அவர் மனைவி வந்தார். என்னை வெறுப்புடன் நோக்கினர். நான் நாணித் தலைகுனிந்தேன்.

பேசாமல் வெளியே வந்தேன். அம்மாவும் சோகமே உருவாக இருந்தார்கள். அம்மா என் நிலையைக்கண்டு கண்டு அழுதார்கள். எப்போதும் அன்புடன் உரையாடும் என் தங்கை பெண் புலியைப் போல் என்னைக் குரூரமான பார்வையால் பார்த்தாள்.

துணிவை வரவழைத்துக் கொண்டேன். என் தந்தையிடம் சென்று, ''நீங்கள்கூட என்னை நம்பவில்லையா, அப்பா'' என்று கேட்டேன். அவர் ஒன்றுமே சொல்லவில்லை. மேசையைத் திறந்து சில புகைப் படங்களை எடுத்து என் எதிரில் போட்டார்.

அவற்றைப் பார்த்தபோது நிலை தடுமாறினேன். 'ஆ' என்று அலறிவிட்டேன். எனக்குத் தெரியாமலேயே என்னைச் சுற்றி என்னென்னவோ நடந்திருக்கிறது—யார் யாரோ என்னென்னவோ செய்திருக்கிருர்கள். நான் எவ்வளவு பாடுபட்டாலும் இனி என்னை யாரும் நம்பமாட்டார்கள். அந்தப் புகைப் படங்களில் நானும் ஈாதாவும் அல்லவா இருக்கிறோம். எப்போது அப்படி இருந்தோம் என்று எனக்கே தெரியவில்லையே.

என்னவோ நடந்திருக்கிறது. அந்த 'என்னவோ' என்பது என் உயிரைப் பழிவாங்கும் பலம் வாய்ந்தது. அதனால்தான் என்னை எல்லோரும் பழிக்கிறார்கள். உற்றாரும் உறவினரும் நண்பரும் என்னை நம்ப மறுக்கிறார்கள். எனக்குப் பைத்தியமே பிடித்து விட்டது.

"வேண்டாம் அப்பா! நீங்கள் மட்டும் அல்ல. யாருமே என்னை நம்பவேண்டாம்" என்று வெறி கொண்டு வெளியே ஓடிவந்தேன். வீதியில்...

"இந்த ஜென்மத்தை எடுத்துக்கொண்டு வெளியே வருகிறானே."

சொல்லம்பு என் இதயத்தின் அடித்தளத்தில் தைத்து, உயிரை 'சுண்டி' இழுத்தது.

சேச்சே! உயிர் என்ன வெல்லமா?

எனக்கும் என் பெற்றோர் வேண்டாம்—உறவினர் தேவையில்லை...உயிரினுமினிய நண்பர் தேவையில்லை...எனக்கு என் வாழ்வே தேவையில்லை.

முத்து :

'வாழ்வே தேவையில்லை' என்று சொல்லிவிட்டான் அரசு. 'தற்கொலை கோழையின் செயல்' என்று எத்தனையோ தடவை எனக்கு அறிவுறுத்திய அவனே அந்த முடிவுக்கு வந்துவிட்டான்.

'அரசு...ஒரு எழுத்தாளன்... பேச்சாளன்...பிறவி நடிகன்' என்றெல்லாம் புகழ்ந்து மார்போடு மார்பாகத் தழுவி அணைத்து மகிழ்ந்த என் கைகளே அவனுக்குக் கொள்ளியை வைத்தன.

அவனைக் கண்ணில் காண வொட்டாமல் அவன் மீது, சுடுசொற்களை வீசி அவனது இதயத்தைத் துளைத்துக் கொன்றுவிட்ட இதே சமூகம், இன்று 'அய்யோ பாவம் — அரசு நேர்மையான வண்டி...அவமானம் தாங்காமல் தற்கொலை பண்ணிகிட்டான். யார் யாரோ வீணாகக் கதை கட்டிவிட்டு அவனைக் கொன்னுட்டாங்க' என்று நீலிக்கண்ணீர் வடிக்கிறது. நான்கூடத் தான் அவனுக்காக இன்று அழுகிறேன்.

அரசு...என் அரசு போய்விட்டான். என்னுடைய பாதி அறிவு, திறன், சிந்தனையெல்லாம் அவனோடு போய்விட்டது. என் உயிரின் ஒரு கூறே போய்விட்டது.

ஒவ்வொரு நாள் மாலையும் அவன் கல்லறைக்குச் செல்வேன். அவன் எழுதிய கதைகளை அங்கே அமர்ந்து படித்துவிட்டு, என் கண்ணீரைக் காணிக்கையாக்கி விட்டு வருவேன்.

அன்று கூட அப்படித்தான்... 'புரளி' என்று அவன் எழுதிய சிறுகதை ஒன்றை கல்லறை அருகில் அமர்ந்து படித்துக்கொண்டிருந்தேன். பெருமூச்சு வாங்க ஒருவன் என்னிடம் ஓடிவந்தான். அவனை எங்கேயோ பார்த்த கவனம்...

''நான் அரசுவின் நண்பன். பெயர் காட்டுத்துரை''-அவனே அறிமுகப்படுத்திக் கொண்டான். என் பதிலையோ பேச்சையோ அவன் எதிர்பார்க்கவில்லை. பேசிக் கொண்டே போனான்.

''அரசு...உத்தமருங்க. நான் தான் வீண் புரளி செய்து அவர் மீது அபாண்டமான பழிகளைச் சுமத்தினேன். ஜனங்களும் பொய் வதந்தியை நம்பி அவரைக்கொன்னுட்டாங்க''—என்றான்.

நான் திடுக்கிட்டு நிமிர்ந்தேன்.

''ஆமாம். நான் ராதாவைக் காதலித்தேன். அவள் அரசுவைக் காதலித்தாள். அரசு அவசரப்பட்டு முடிவுக்கு வரவில்லை. நான் அந்த இடைவேளையைப் பயன்படுத்திக் கொண்டு ஊரில் வதந்தியை எழுப்பினேன். வெறும் வாயையே மெல்லும் சுபாவமுடையவர்கள், மக்கள்—அத்துடன் அவலும் கிடைத்தால்...? அவர் எழுதி வைத்திருந்த ஒரு கதையிலிருந்து காதல் கடிதத்தைக் கிழித்து வெற்றிவேலரிடம் காட்டி ''ராதாவுக்குத்தான் எழுதினார்'' என்றேன். அவர்கள் நாடகத்தில் நடித்த காதல் காட்சிகளை யாருக்கும் தெரியாமல் புகைப்படம் எடுத்து அவரிடம் காட்டினேன். என் செயல்களால் ராதா ஆத்திரமடைந்திருந்தாள். ஒருநாள் இரவு ஒரு நண்பன் மூலமாக அரசு அழைப்பதாகக் கூறி அவளை மாந்தோப்புக்கு அழைத்துச் சென்றோம். ''ஊரிலேதான் உன்னைப் பற்றித் தாறுமாறாகக் கூறுகிறார்களே—இப்போதாவது என்னை மணந்து கொள்கிறாயா?'' என்று கேட்டேன். அவள் ''முடியாதடா, தறுதலையே'' என்றாள்.

''என் மனிதத் தன்மை மிருக வெறிக்குப் பலியாகி விட்டது; அந்த மிருக வெறிக்கு அந்த அழகு மயில்...மின்னல் கொடி பலியாகிவிட்டாள்.

''இரவு எட்டு மணியிருக்கும். 'இராதா தூக்கில் தொங்குகிறாள்' என்று ஊரில் பேசிக் கொண்டார்கள். எனக்குத் தெரியும் அவள் எதனால் இறந்திருப்பாள் என்று. உடனே நானும் என் நண்பனும், அரசும் அவளும் மாந்தோப்பில் பேசிக் கொண்டிருந்ததாகவும் நாங்கள் ஏழு மணிக்குப் பார்த்ததாகவும் —அப்போது அவளை அரசு அடித்துக் கொண்டிருந்ததாகவும் அலர் தூற்றிவிட்டு விட்டோம். மக்கள் அதையே பிடித்துக் கொண்டனர். நான் மறுநாளே சென்னை ஓடிவிட்டேன். அரசு நான் சுமத்திய பழியால் இறந்து விட்டார் என்று கேள்விப்பட்டபோது என் மனச்சான்று என்னைக்கொன்றது—ஓடிவந்தேன்.''

நான் அவன் பேச்சைக் கேட்கிறேனா இல்லையா என்பதைக் கவனிக்காமலேயே, 'மளமள' வென்று தன் மனப்பாரத்தை இறக்கி வைத்த காட்டுத்துரை தடாலெனக் கல்லறை அருகில் வீழ்ந்தான்.

கல் நெஞ்சக்காரர்களையும் கலங்க வைக்கும் திறன் வீண்

குறள் மருத்துவம்

[மலரோன்]

(34-ம் பக்கம் தொடர்ச்சி)

புராளிக்கு உண்டு. அத்தகைய சக்தி படைத்த புராளியை உண்டாக்க அளவுகடந்த வன்மையும், தீயவைக்கும் அஞ்சாத இதயமும் இருக்கத்தான் வேண்டும். ஆனால் தன்னை சிருஷ்டிக்கும் வன்மை கொண்டவர்களையே திருப்பிக் கொல்லும் திறனும் அந்த 'வீண் புராளி'க்கு உண்டா? இல்லை என்றால், கல்லறையின் காலடியில் வீழ்ந்த காட்டுத்துரை ஏன் மீண்டும் எழுந்திருக்கவே இல்லை!

கல்லறையைப் பார்த்தேன். சலனமற்ற என் இதயத்திலிருந்து அன்பு வெள்ளம் பிரவாகமெடுத்தது. கல்லறையைக் கட்டிக்கொண்டு, 'அரசு—அரசு! நான் புதிய விளக்கம் பெற்றேன். உன் பழைய நண்பனை இழந்துவிட்டேன். உன்னை நம்புகிறேன்! நான் சொல்லுவதை.....நீ என்னை ......நம்புகிறாயா — இல்லையா?'' என்று கத்தினேன். அந்தச்சொற்களையே அக்கல்லறையும் பயங்கரமாக எதிரொலித்தது. ஏனோ அந்த ஒலியைக் கேட்டு நானே நடுங்கினேன்...

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

ஆனால் நோயின்றி வாழ்வது சாத்தியமா? நோய்க்குக் காரணம் நமது பழக்க வழக்க சூழ்நிலை என்பர். ஆயினும் அடிப்படைக் காரணமே நாம் உண்ணும் சோறும் பருகும் நீருமேயாகும்.

இதில் விசித்திரம் என்னவென்றால் உண்ணும் உணவும் பருகும் நீரும் நோயும் அளிக்கும்; நோயும் தீர்க்கும். நோய்க்குக் காரணமும் உணவு; நோய் தீர்க்கும் மருந்தும் உணவு. எனவே உணவு விஷயத்தில் நாம் எச்சரிக்கையாக நடந்துகொண்டால் உணவே சிறந்த நோய்த் தடுப்பு மருந்தாகும் என்கிறது குறள்.

நோய் எப்படி ஏற்படுகிறது?

''மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று''

நமது உடல் நலனை உரிய முறையில் சரிகட்டுவனவும்— நலனைக் கெடுப்பனவும் வாதம், பித்தம், சிலேத்துமம் என்று மூன்றும். இவை நம் உடலின் உள்

வீடு இயக்க விசைகளாகும். இவைகள் உரிய அளவு விகிதப்படி சீராக இருந்தால் நோய் இல்லை. இவைகளில் ஏதாவது ஒன்று அதிகரித்தாலோ குறைந்தாலோ நோய் ஏற்படும்.

வாத நீர் அதிகரித்தால் கை கால் அங்கங்கள் பிடிப்பும் வலியும் ஏற்படும். பித்தம் அதிகரித்தால் தலை சுற்றல் மயக்கம் குமட்டல் ஏற்படும்.

சிலேத்துமம் (சீதள-கவம்) அதிகரிப்பு இருமல் சுரம் உண்டாகும். இவைகள் உரிய அளவுக்கும் குறைந்தாலும் இதேபோல் நோய் ஏற்படும். "இவைகள் நாம் உண்ணும் உணவுக்கும் பருகும் பானங்களுக்கும் ஏற்றபடி அதிகரிப்பும் குறைவும் அடைகின்றன. எனவே நமது உணவு வகைகளையும் உண்ணும் முறையையும் காலவரையையும் சரிகட்டிக்கொண்டால் இவை சோளாறு அடையமாட்டா; நோயும் ஏற்படாது. இந்தத் தடுப்பு முறைகளைத் திருக்குறள் விளக்கமாகத் தருகிறது.

> "மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
> அற்றது போற்றி உணின்."

நோய் வராது செய்ய முற்காப்பு, உண்ட உணவு சரிவர செரிய வேண்டும். இப்படி முன் உண்ட உணவு செரித்ததா என்பதை அறிந்தே பின்னர் உண்ண வேண்டும். இப்படிச் செரித்த பிறகு பசி எடுத்ததும் தேவைப்பட்ட அளவுக்கு உண்டால் உடம்புக்கு நோயும் இல்லை; மருந்து தேவையும் இல்லை.

இப்படிச் செரித்ததறிந்து பின்னர் அளவறிந்து உண்பது "நெடிது உய்க்கும் ஆறு" அதாவது உடம்பு நல்ல வலுவோடும் நீண்ட காலமும் இருப்பதற்கான வழியாகும்.

> "அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல துய்க்க
> துவரப் பசித்து"

இப்படி உண்பதும் பசித்து உண்ண வேண்டும். அதுவும் தம் உடலுக்கு ஒத்துப் போகும் உணவு வகைகளை உண்ண வேண்டும்.

> "மாறுபாடு இல்லா தஉண்டி
> மறுத்து உண்ணில் ஊறுபாடு
> இல்லை உயிர்க்கு"

நமது உடம்புக்கு ஒத்துக் கொள்ளும் உணவை தேவைக்கு அதிகரிக்காமல் அளவாக உண்டால் நம் உயிர் நமது உடம்பில் நீடித்து நிற்பதற்கு தடை விளைவிக்கும். எந்த வகை நோயும் நமக்கு விளையாது.

> "இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
> கழிபேர் இரையான் கண் நோய்"

அளவறிந்து பசியறிந்து உணவின் தகுதியறிந்து உண்பவனுக்கு உடல் வழி இன்பம் நீடித்து இருக்கும்-அளவும், பசி நிலைமை

யும் அறியாமல் கண்ட கண்ட உணவைக் காலமறியாமல் உண்டால் பல வகை நோய்களுக்கு அவனது உடல் நிலையான இடமாகிவிடும்.

"தீயளவன்றித் தெரியான் பெரிது உண்ணில் நோய் அளவின்றிப் படரும்"

கேடான உணவுஎது, கேடான முறை எது என்று தெரிந்து கொள்ளாமல் கண்மூடித்தனமாக உண்டால் ஏராளமான நோய்கள் ஏற்படும்.

இப்படித் தவறானமுறைகளால் நோய் ஏற்பட்டுவிட்டால் நீங்குவதற்கு என்ன செய்கிறது. இந்த நோய்கள் விஷயத்திலும் கண்மூடித்தனமாக நடந்துகொள்ளலாகாது. கண்மூடித்தனமான கடைச் சரக்கு மருந்துகளை கூட உண்டு வைக்கலாகாது.

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்"

நோய் ஏற்பட்டால் முதலில் அது என்ன நோய் என்று கணித்தறிய வேண்டும். அடுத்து அந்த நோய் ஏற்பட்டதற்குக் காரண காரியம் என்ன என்பதை ஆராய்ந்துஅறியவேண்டும். அதற்குப் பிறகு அந்த நோயின் தன்மை, வேகம், விளைக்கும் கெடுதி ஆகியவற்றை கவனித்தறிய வேண்டும். இவற்றிற்கு ஏற்ப அந்த நோயைத் தணிப்பதற்கான முறைகளையும் மருந்துவகைகளையும் கணித்தறிந்து மருத்துவம் செய்துகொள்ள வேண்டும். அந்த மருத்துவமும் மருந்தும் நமதுஉடல் நிலைக்குப் பொருத்தமானதாக, நமது உடல் சமாளிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். நோய் ஒன்றேயாக இருந்தாலும் எல்லா வயதினருக்கும் ஒரே வேகமாக இருக்காது. ஒரே மருந்து ஒரே அளவாகக் கொடுத்தாலும் அந்த நோய் தணியாது.

உடல் வலிமை, வயது, ஆகியவற்றிற்கேற்ப நோயின் வேதனையின் அளவும் விளைவும் மாறுபடும் மற்றும் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் நடுத்தர வயதினருக்கும் முதியவர்களுக்கும், ஆண் பெண்களுக்கும் கர்ப்பிணிகளுக்கும் பிள்ளைபெற்ற உடலினருக்கும் கிழவிகளுக்கும் உடல் நிலைமையும் வலிவும் தன்மையும் தாக்குப் பிடிக்கும்சக்தியும்மாறுபடும்.

"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்கற்றான்கருதிச் செயல்"

எனவே நோயாளியின் வயதை முதலில் கேட்டறிந்து உரிய அளவு உரிய மருந்து தரவேண்டும். அவரவர்களின் உடல் தன்மைக்கும் சக்திக்கும் ஏற்றபடி ஒரே மருந்தாயினும் உரிய அளவில் கணித்துக் கொடுக்க வேண்டும். அல்லது அவர்களுக்கு ஏற்ற வெவ்வேறு மருந்துகள் தரவேண்டும். மற்றும் நோயின் அளவையும் அதாவது சொற்பமானதா கடினமானதா; துவக்கமா முற்றிய நிலைமையைஅடைந்ததா என்பதையும் சமீபத்தில் ஏற்பட்டதா அல்லது நாள் பட்டதா, நோய் ஏற்பட்டு எத்தனை நாட்களாயின இவற்றையும் விசாரித்தறிய வேண்டும். லேசான

நோய் அல்லது துவக்கப்பட்ட நோய், அல்லது சமீப காலத்தில் ஏற்பட்டதாயின் லேசானமருந்துகள் தரவேண்டும்.

கடினமான நோய் அல்லது முற்றிய நோய் அல்லது நீண்ட கால நோய் என்றால் அதற்கேற்ப அதிக சக்தி கொண்ட மருந்துகள் தரவேண்டும்.

நோயாளியே தனக்கு ஏற்பட்ட நோயை ஆராய்ந்தறிந்து அதற்கான மருந்தையும் தேர்ந்தெடுத்து, சிகிச்சையும் செய்து கொள்வது சாத்தியமா என்று சந்தேகம் ஏற்படலாம்.

"உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச் செல்வான் என்று அப்பால் நாற் கூற்றேமருந்து".

நோயாளியே மருத்துவம் செய்துகொள்வது சாத்தியமில்லை. நோயாளி, நோய்க் கூறு கண்டு பிடித்து மருந்து கணித்தறிவிக்கும் வைத்தியன் அந்த மருந்தைத் தயாரிப்பவன், அந்த மருந்தை நோயாளியின் அருகிலிருந்து கால தவணையறிந்து உரிய நேரத்தில் உரிய அளவு தருபவன் (மருத்துவதாதி அல்லது சிப்பந்தி) ஆகிய நால்வர் உதவியும் சிகிச்சைக்குத்தேவைப்படுகிறது.

உண்ணும் சோறும் பருகும் நீரும் நம் உடல் நலனுக்கு முக்கியமானவை. எனவே அவை தூய்மையானவையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவே நம்மாழ்வாரும் உண்ணும் சோறும் பருகும் நீரும் எல்லாம் ஆண்டவன் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்.

—'நவ இந்தியா'

"ஆரம்பக்கல்வி" ஆபீஸ்.

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரு 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

ஸ்காட்லாந்து நாட்டுப் பழமொழிகள்

[தொகுத்தவர் :—அன்புப் பழம்நீ]

குப்பையைக் கிளறும் கோழிக்குத் தான்யமணிதான் முக்கியம், இரத்தின மணியல்ல.

உளவறியாத வெள்ளாடு ஓநாயைச் சாட்சி போட்டதாம்.

மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் வேலை செய்யும்போது ஆராய்ந்து செய்ய வேண்டும்; ஏனெனில் ஒரு ஸ்காட்டிஷ்காரன் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் ஒரு செம்மறியாடு படுத்திருந்ததைக் கண்டு சீமாட்டியென்று எண்ணிக் கொண்டானும்!

போர்க்கருவிகள் புதுப்பிக்கப்படுகின்றன எனில், நாட்டின் நலனுக்கு நலிவு வந்துவிட்டதென்றுதான் பொருள்.

மிகுதியாக ஒலியை எழுப்பும் டமாரத்தின் உள்ளே என்னவோ இருக்க வேண்டுமென்று எண்ணிவிடாதே; வெறும் காற்றுத்தானிருக்கிறது.

எலும்பால் அடிப்பதானால் நாய் குரைக்கவே குரைக்காது; ஏன்? எலும்பின்மேலுள்ள ஆசையால்.

வெட்டுக் கிளியின் வாலைப்பற்றும் கைக்குப் பழக்கம் வேண்டும்; பெண்ணின் கையைப் பற்றும் கைக்குச் சிந்தனை வேண்டும்.

காலில் செருப்புள்ளவனுக்குப் பூமி முழுதும் தோலால் ஆக்கப்பட்டது போலத்தான் தோன்றும்.

எலியைத் தன் இறகால் மூடும்கழுகுக்கு எலியைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணமா இருக்கமுடியும்?

ஒரு திருவிழாவில் குட்டிக்கலைகங்கள்கூட நடக்காவிட்டால் அந்த விழாவுக்கு அழகுதான் எங்கிருந்து வரும்?

ஒருவன் சிறந்த வில்லாளி என்பது அவனிடமுள்ள அம்பைப் பார்த்தால் தெரியாது; அவன் வைக்கும் குறியைப் பார்த்தால்தான் தெரியும்.

பணமில்லாத மணிபர்ஸ் வெறும் தோலுக்குத்தான் சமானம்; ஐயமா இதிலே? அப்படியானால் நாயை விட்டுப் பரீட்சித்துப் பாருங்கள்.

வேலைக்காரனையும் கோழியையும் ஓர் ஆண்டுக்குத்தான் வைத்துக்கொள்ளலாம்; அப்புறம் மாற்றித்தான் ஆகவேண்டும்.

கடவுள் நல்ல உணவுப்பொருளை அனுப்புகிறார்; அதைச் சமைக்க 'சாத்தான்' சமையற்காரர்களை அனுப்புகிறது!

* * * *

கவலையை வளர்ப்பது காசு.

* * * *

கிணற்றில் விழுந்தாலும் கல் அழுகிப்போகாது.

* * * *

அழகு மிகுந்துள்ள ஏழைப் பெண்ணுக்குக் காதலர்கள் பற்பலர் கிடைக்கலாம்; ஆனால் கணவன் கிடைப்பதுதான் அருமை.

* * * *

மாசுமறுவற்ற கூழாங்கல்லைவிட, மாசுள்ள வைரம் மேலானது

* * * *

குழந்தை அழுதால்கூட அதைப் பொறுத்துக்கொள்ள முடியும்; ஆனால் அதன் தாயார் விடும் பெருமூச்சை அன்புள்ள எந்தக் கணவனும் பொறுக்க முடியாது.

ஒரு பெண் வீட்டைவிட்டு இரண்டுமுறைதான் வெளியே போகலாம். (1) திருமணம் (2) மரணம்.

வேலைக்காரி கதவைத் திறந்துவைத்தால், பாலைக்குடித்த பழி பூனையின் மேல்தான் விழும்.

* * *

கண்ணில் நீர்வடிக்கும் பெண்ணும், கழுத்தில் தோல்பட்டையில்லாத நாயும் அனுதாபத்திற்குரியவர்கள்.

வாழ்க்கை வரலாறு

அடிமையை ஒழித்த விடுதலை வீரர்

"எண்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு நம் முன்னோர் புதியதொரு நாட்டைத் தோற்றுவித்தனர். உரிமையில் மலர்ந்தது அந்நாடு; மக்கள் அனைவரும் பிறப்பில் சமமானவர்கள் என்ற அருங்கொள்கைக்காகவே பிறந்த நாடு இது......" கெட்டிஸ்பர்க் போர்க்களத்தில் கம்பிய குரலில், துயரத்தால் நிறுத்தி நிறுத்தி உணர்ச்சி ததும்ப ஜனாதிபதி லிங்கன் இவ்வாறு கூறினார். யூனியன் படைகள், யூனியனை எதிர்த்த மாநிலங்களின் படைகள் ஆகிய இருசாராரின் படை வீரர்களின் சிதைந்த உடல்கள் போர்க்களத்தில் கிடப்பதுபோலவும், சாவோரின் முனகல் கேட்பது போலவும் கெட்டிஸ்பர்க் போர்க்களம் அவரது மனக் கண்களில் தோன்றியது. அந்நிலையில் அச்சொற்கள் அவரது வாயினின்றும் பிறந்தன.

மனத்திரையில்தோன்றிய அக்காட்சி அவரை உருக்கிவிட்டது. விரைவாக எழுதி, 1862-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஒரு நாள் காலையில் அவர் பேசிய இம்மொழிகள் விரைவில் மறக்கப்படும் என்று அவர் கருதினர். புகழ்பெற்ற அந்த கெட்டிஸ்பர்க் பேச்சு வரலாறு கண்ட பேருரைகளில் ஒன்றாகத் திகழும் என்றும், உலகெங்குமுள்ள சுதந்திர மக்களுக்கு நம்பிக்கையளிக்கும் சின்னமாகவும் ஜனநாயகத்தின் உண்மைப் பொருள் உரைப்பதாகவும் விளங்குமென்றும் அன்று அவர் நினைக்கவே இல்லை.

அமெரிக்காவின் பதினாறாவது ஜனாதிபதியாகிய ஆபிரகாம் லிங்கன் 1809-ம் ஆண்டு கென்டக்கி மாநிலத்தில் ஹாட்ஜன்வில் என்னும் இடத்தில் பிறந்தார். சிறுவராயிருந்த காலத்தில் ஒரு மரக்குடிலில் அவர் வாழ்ந்தார். அடுப்பு நெருப்பின் வெளிச்சத்தில் அவர் எண்ணும் எழுத்தும் பயின்றார். அவருக்குக் கற்றுக்கொடுத்தவர் அவருடைய சிற்றன்னை சாரா. அவரிடம் சாரா மிகவும் அன்புள்ளவராக இருந்தார். ஆதலால்தான் லிங்கன் தன் உயர்ந்த பதவிவகித்த காலத்தில், "நான் இவ்வாறு இருப்பதற்கும், இனியும் நன்றாயிருக்கலாம் என்று நம்புவதற்கும் காரணம் என் அன்னையாரே" என்று கூறினார்.

அமெரிக்க இந்தியப் பழங்குடிகள் குடியிருந்த எல்லைப் புறங்களில் துணிந்து குடியேறிய உரங்கொண்ட மக்களைச் சேர்ந்தவர் அவர். ஆபிரகாம் லிங்கன் நல்ல உடற்கட்டும் வலிமையும்

உள்ளவர். மற்போரில் அவர் ஒருவரை வென்ற சமயத்தில் "அவர் மற்றவர்களைவிட விரைவாக ஓடமுடியும், மற்றவர்கள் தூக்க முடியாத பளுவைத் தூக்கமுடியும், மற்போரில் எவனையும் தூக்கி எறிய முடியும்" என்று அவரது வலிமையைப் புகழ்ந்தார்கள். இந்த உடல் வலிமையைவிடச் சிறப்பு மிக்கதாகவிளங்கியது அவரது நேர்மை குணம். அதனால் தான் அவர் 'நேர்மையாளர் ஆப்' என்னும் பெயர் பெற்றார். நாடு முழுவதும் அவருக்கு வழங்கிய பெயர் அதுவே.

வழக்கறிஞராக அவர் பெயரும் புகழும் பெற்றார். அவர் பெயரை அறியாதார் இல்லை. இல்லினாய்ஸ் மாநிலச் சட்ட மன்றத்துக்கு அவர் நான்கு தடவை தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் நல்ல பேச்சாளர்; சாதாரண மக்களின் மொழி பேசியவர்; தெளிவாகவும் செம்மையாகவும் தமது கருத்தை எடுத்துரைத்தவர். சிறிதும் கலங்காத அமைதி உள்ளம் படைத்தவர் அவர். அவரது உள்ளார்ந்த ஆற்றலுக்கு அது ஒரு ஊற்றாகும்.

அவர் யூனியன் ஜனாதிபதியானதும், அவர்மீது பல்வகை இழிமொழிகள் கூறத் தொடங்கினர். பத்திரிகைகள் வசை மொழிகள் வரைந்தன; கேலிப் படங்கள் தீட்டியும் அவரை இழிவுபடுத்தின. அவரோ தம்மைக் 'கொடுங்கோலன், சர்வாதிகாரி' என்றெல்லாம் எழுதிய நியூயார்க் "வொர்ல்ட்" பத்திரிகைக்கும் அபூர்வமான தாராள மனப்பான்மையோடு மன்னிப்பளித்தார்.

லிங்கன் மிகவும் இரக்கம் உள்ளவர். அது அவரது பலவீனத்தின் அறிகுறி என்று பலர் நினைத்தது மிகவும் தவறு.

1861-ல் அவர் போர் தொடுத்தார், முற்றுகையிட்டார், கிளர்ச்சியாளரை அடக்கப் படையைப் பயன்படுத்தினார், முடங்கிக் கிடந்த அமெரிக்க அரசாங்க நிதியைச் சட்டமன்றத்தின் அனுமதியின்றிப் பயன்படுத்தினார். எனவே, இணங்கிவர விரும்பாத அவரது எதிரிகள், அவர் "கொடுங்கோலன்" என்றும் "சர்வாதிகாரி" என்றும் அவர் மீது குற்றம்சாட்டினார்கள்.

அடிமை மக்களுக்கு ஆபிரகாம் லிங்கன் ஒரு விடுதலை வீரராகவும், அடிமைத் தளையை அறுப்பவராகவும், சுதந்திரமும், நீதியும், சமத்துவமும், வாய்ப்பும் உள்ள ஒரு நல்வாழ்வுக்குத் தங்களை வழிநடத்துபவராகவும் காட்சியளித்தார். அனைவரும் சுதந்திரத்தின் பலன்களை அனுபவிக்கவேண்டுமென்றும் இது ஒரு நீதி நெறியாகுமென்றும், அவசியமானால் இராணுவத்தைப் பயன்படுத்தியும் அந் நெறியை நிலைநிறுத்தலாமென்று அரசியல் சட்டம் கூறுவதாகவும் அவரது விடுதலைப் பிரகடனம் விளம்பியது.

உள்நாட்டுப் போரால் துன்பமும் துயரமும் அடைந்த மக்களி

டத்தில் அவர்காட்டிய அன்புக்கு ஓர் அளவே இல்லை. போர் நடந்த காலம் முழுவதும் பெருந்துயரம் அவரிடம் குடிகொண்டிருந்தது. அக்காலத்தில் தன் ஐந்து மக்களை யும் போர்க் களத்தில் பறி கொடுத்த ஒரு தாய்க்கு அவர் பின்வருமாறு எழுதினார். "தன் இறுதி மகனையும் இழந்துவிட்ட தாய்க்கு......புனிதம் வாய்ந்த உன் துயரத்தில் நான் குறுக்கிடு வதாக இது கருதப்படமாட்டாது என்று நம்பி, என் இளம் நண்ப னும், உன் வீர மகனுமாகிய படை வீரனுக்கு அஞ்சலி செலுத்தி, நான் இக்கடிதத்தை உனக்கு எழுதத் துணிந்துள் ளேன்..."

உழைப்பையும், அரசியல் கொந்தளிப்பையும் பொருட்படுத் தாமல், தம் இலட்சியங்களுக்காக வாழ்ந்தவர் லிங்கன். எனவே, அவரது புகழ் ஒருநாளும் மறை யாது. அத்தகைய நேர்மையா ளரை 1865, ஏப்ரல் 14-ந் தேதி வாஷிங்டன்நகரில் போர்டு நாடக அரங்கில் மதிமிழந்த நடிகன் ஜான் பூத் என்பவன் சுட்டுக் கொன்றுவிட்டான். ஏப்ரல் 15-ம் தேதி மாலை 7 மணிக்கு அவரது உயிர் பிரிந்தது. இல்லி னொய்ஸில் ஸ்பிரிங் பீல்டில் அவரை அடக்கம் செய்யும் இடத்துக்கு அவரது உடலை ஏற்றிச் சென்ற இரயில் புறப்பட்ட போது "தந்தை ஆப்" என்று அவரிடத் தில் அன்பு பூண்டொழுகிய மக் கள் கண்ணீர் உகுத்துக் கரைந் தழுதனர். சுதந்திரம், சமத்து வம், சகோதரத்துவம் என்னும் இலட்சியங்களுக்குத் தம்மை அர்ப்பணம் செய்திருந்த ஒரு வரை உலகம் இழந்தது. லிங்க னது மரணப் படுக்கையில் அவ ரது முகப் பொலிவைக் கண்ட அயல்நாட்டுத் துறைச் செயலாளர் ஸீவர்டு "அவர் இன்று அமர ராகி விட்டார்" என்று கூறியது முற்றும் உண்மை.

புதுமை இலக்கியம்

[டாக்டர் மு. வரதராசன்]

வாழ்க்கை காலத்திற்குக் காலம் வேறுபடுவது போல், இலக்கியமும் காலத்திற்குக் காலம் வேறுபடும். ஏன் எனில் இலக்கியம் வாழ்க்கையோடு ஒட்டியது; வாழ்க்கையிலிருந்து மலரும் மலர் என்று கூறத்தக்கது. வாழ்க்கை என்றும் ஒரே நிலையாக இருப்பதில்லை. ஆதலின், இலக்கியமும் ஒரே வகையாக இராமல் படிப்படியே மாறி வளர்ந்துவருகிறது. வாழ்க்கையின் அடிப்படை உணர்ச்சிகள் மாறாமல் இருக்கலாம். அவற்றின் காரணங்கள் வெவ்வேறு வகையாக ஏற்பட்டு வருகின்றன. நோக்கங்கள் மாறாமல் இருக்கலாம்; நோக்கங்களை அடைவதற்கு வேண்டிய வழிவகைகள் மாறி வருகின்றன. உண்ணல் உடுத்தல் முதலியன மாறாமல் இருக்கலாம்; உணவு வகைகளும் உடை வகைகளும் சிற்சில மாறுதல்களைப் பெற்று வருகின்றன. இந்த மாறுதல்களின் பயனாக வாழ்க்கையிலிருந்து மலரும் இலக்கியமும் சிற்சில வேறுபாடுகளைப் பெறக் காண்கிறோம்.

இலக்கியம் அமைவதற்கு உணர்ச்சியும் கற்பனையும் வேண்டும்; அழகான வடிவமும் வேண்டும். மனத்தின் அடிப்படை உணர்ச்சி என்றும் ஒரே வகையாக இருப்பதில்லை. இன்பதுன்பங்கள் தோன்றுவதற்குக் காரணமான நிகழ்ச்சிகள், காலத்திற்குக் காலம் வேறுபட்டு வருவதால், இலக்கியத்தில் உணர்ச்சிகளைப் படைத்துக்காட்டும் வகையில் புதுமைகள் இடம்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, சங்க இலக்கியத்தில் ஒருவனும் ஒருத்தியும் காதல் கொள்வதாகக் கூறப்பெறும்போது, தினைப்புனம் காவல், புனல் விளையாட்டு, மலர் பறித்தல் முதலியன படைத்துக் கூறப்பெற்றன. ஆனால் இன்று காதலைப் பாடும் கவிஞர்கள் தம் தனிப் பாட்டுக்களில் அவற்றைக் குறிப்பது இல்லை. காதல் கொள்வதற்கு இன்றியமையாதன வாகக் கருதப்பட்ட அவை இன்று வேண்டாதனவாக மாறிவிட்டன. பழைய மரபுகளை விடாமல் போற்றிவரும் கவிஞர் பாட்டுக்களிலேயே இந்த நிலைமையினைக் காண்கிறோம். புதிய மரபுகளைப் போற்றி வளர்ந்துவரும் நாடகங்களிலும், நாவல்களிலும், சிறுகதைகளிலும், மாறுதல்கள் ஏற்பட்டு வருவதைக் கூறத் தேவை இல்லை. அவைகளில் படைக்கப்படும் காதலர்களுக்கும் தினைப்புனத்திற்கும் தொடர்பே இல்லை. தொழிற்சாலையிலோ, கல்விக்கூடத்திலோ, அலுவலகத்திலோ, அவை போன்ற பிற இடங்களிலோ காதல் தொடங்குவதாகக் கூறப்பெறுகிறது. மட

வேறுதல் முதலிய பழைய இலக்கிய மரபுகள் இன்று போற்று வாரற்றுப் போயின. நீரும் நிழலும் இல்லாமல், வெப்பம் மிகுந்து வாட்டும் பாலை வனங்களுக்கு இன்றைய காதல் இலக்கியங்களில் இடம் இல்லை. அவற்றிற்கு ஈடாக இரயில் பயணங்களும் வெளியூர் உணவு விடுதிகளும் இடம்பெற்றுள்ளன.

காதல் அல்லாத மற்றவற்றைப் பற்றிய இலக்கியங்களிலும் இத்தகைய மாறுதல்களைக் காண்கிறோம். சங்க காலத்தில் காதல் அல்லாத மற்றத் துறைகளை எல்லாம் புறத்திணை என்று வகுத்து, பெரும்பாலும் அரசரின் போர்களைப்பற்றியே பாடி வந்தனர். பகைவர்களுடைய பசுக்களைக் கவர்தல், படை எடுத்துச் செல்லுதல், மதிலை முற்றுகை இடுதல் முதல் வெற்றி பெறுதல், புகழ்ந்து பாடப்பெறுதல் வரை எல்லாப் பகுதிகளையும் இலக்கியமாக அமைத்து வந்தனர். இக்காலத்து இலக்கியங்களில் அவற்றிற்கு இடம் இல்லை. மதில் முற்றுகை போய் விமானக் குண்டு வீச்சு வந்துள்ள காலம் இது. போர் முறை அவ்வாறு வேகமும் ஆற்றலும் உள்ளதாக வளர்ந்துள்ள போதிலும் இன்றைய இலக்கியங்களில் போர்கள் சிறப்பிடம் பெறவில்லை. போர்களைப் புகழ்ந்து பாடுவதற்கு மாறாகப் பழித்து எழுதும் மரபு வளர்ந்துள்ளது. 'போரில்லையே' என்று தினவெடுக்கும் தோள்களைப் போற்றிப் பாடுவது பழையமரபு. 'போரே நிகழாமல் உலகத்தைக் காக்க வேண்டும்' என்று பாடுபடும் அறிவோரின் தொண்டுகளே இன்றைய எழுத்தில் பாராட்டப்படுகின்றன. பகைவர் நாடுகள் அழிந்ததை வருணித்துப் பாடிய பதிற்றுப்பத்து முதலான நூல்கள் இனித் தோன்ற முடியாது. போருக்குத் துணையான அரசியல் தலைவர்களைப் பழித்து, அவர்களின் அஞ்சாத செயல்களை வீரச்செயல்கள் என்று புகழாமல் கொடுமைகள் என்று தூற்றும் முறையே இன்றைய எழுத்தில் மிகுந்து வருகிறது. சமுதாய நாடகங்களிலும் நாவல்களிலும் சிறுகதைகளிலும் பெரியபெரிய அரசியல் நிகழ்ச்சிகளைவிட ஒரு சிலரின் இன்ப துன்பங்களே மிகுதியாக எடுத்துரைக்கப் படுகின்றன.

உணர்ச்சியைப் படைத்துக் காட்டுவதில் இலக்கியம் மாறிவருவது போலவே, கற்பனைகளை அமைப்பதிலும் மாறுதல் பெற்று வருகிறது. முழுதும் இல்லன கூறாமல் உள்ளவற்றையே சிறிது புனைந்து கூறும்முறை மதிப்புப் பெற்றுவருகிறது. வாழ்க்கையோடு ஒட்டாத வேடிக்கை கற்பனைகளைவிட, வியப்பான கற்பனைகளைவிட, வாழ்க்கையோடு ஒட்டிய கற்பனைகள் இன்றைய இலக்கியத்தில் மிகுதியாகி வருகின்றன, பல தலைகளையும் பல கைகளையும் உடைய ஆட்களை இன்றைய எழுத்தாளன் படைத்துக்காட்டுவதில்லை. கடவுள் வழிபாடும் அறத்தின் ஆட்சியும் உள்ளனவே தவிர, தெய்வம் அடிக்கடி வந்து பேசுவதும் மறைந்து

போவதும் இன்றைய எழுத்தில் இல்லை. எதிர்பாராத நிகழ்ச்சிகள் உள்ளனவே தவிர நம்பமுடியாத அற்புதங்கள் இல்லை. எதற்கும் காரணங்களை ஆராய்ந்து ஊடுருவிப் பார்க்க முயலும் அறிவியல் வளர்ச்சியால், வாழ்க்கையோடு ஒட்டிய கற்பனைகளுக்கு மட்டுமே மதிப்பு இருந்து வருகிறது.

இலக்கியத்திற்கு உரிய உணர்ச்சியிலும் கற்பனையிலும் மாறுதல்கள் ஏற்பட்டது போலவே, இலக்கியத்தின் வடிவத்திலும் மாறுதல்களைக் காண்கிறோம். வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களே அதற்கும் காரணம் ஆகும். முன்னோர்க்கு இருந்த அளவு ஓய்வும் அமைதியும் இக் காலத்தார்க்கு இல்லை. அவர்கள் சிலரோடு மட்டும் பழகிச் சில நூல்கள் மட்டும் கற்று அமைதியாக இருந்தனர். நாம் பலரோடு பழகவேண்டிய நெருக்கடியும் பல நூல்களைப் படிக்க வேண்டிய கட்டாயமும் உள்ளவர்களாக வாழ்கிறோம். விஞ்ஞானக் கருவிகளின் வளர்ச்சி போக்குவரவை எளிதாக்கிய காரணத்தால் உலகம் ஒரு குடும்பம் போல் ஆகி எவையும் எவர்க்கும் தெரியும் நிலையில் வாழ்க்கை நடைபெறுகிறது. வாழ்க்கை விரிவுடையதாகப் பெருகி விட்டது. வாழ்வதற்கு உரிய நாட்களும் மாதங்களும் ஆண்டுகளும் விரிவுபெறவில்லை. அவை முன்போலவே கால அளவு உடையனவாக உள்ளன. சுருங்கிய காலத்தில் விரிந்த வாழ்வு வாழ வேண்டியிருத்தலால், இக்கால வாழ்க்கை பரபரப்பும் வேகமும் உடையதாக மாறியுள்ளது. ஆகையால் ஒரு சில நூல்களைப் போற்றிப் பாடுபட்டுக் கற்று, அவற்றையே திரும்பத் திரும்பச் சுவைத்து மகிழும் கல்வி முறை இன்று இல்லை. பற்பல கற்றுப் பெரும்பங்கு மறந்து சிறுபகுதி மட்டும் நினைவில் நிற்க, அவற்றைக் கொண்டு அப்பால் கடந்து செல்லும் முறையே உள்ளது. கரும்புத் தோட்டத்திற்குச் சென்று நுனிமுதல் அடிவரை மென்று மெல்லச் சுவைத்து மகிழ்வது போன்றது பழைய முறை. போகிற போக்கில் கடைத்தெருவில் சில விநாடிகள் நின்று ஒரு குவளையில் கருப்பஞ் சாற்றை வாங்கிக் குடித்து அப்பால் செல்வது போன்றது இன்றைய கல்விமுறை. இன்றும் தோட்டத்தை நாடிச் சென்று கரும்பைச் சுவைப்பவர் உண்டு. அவர்கள் மிகமிகச் சிறுபான்மையோர். இலக்கியக் கல்வியே வாழ்க்கையாகவும் பொழுதுபோக்காகவும் கொண்டு மகிழும் கலைஞர் இன்றும் ஒரு சிலர் உள்ளனர். ஆனால் இன்று படைக்கப்படும் இலக்கியங்கள் அவர்களுக்காக மட்டும் படைக்கப்படுவன அல்ல. எழுதப் படிக்கத் தெரிந்த பலர்க்கும் இலக்கிய நூல்கள் தேவையாக உள்ளன. அவர்களோ கருப்பஞ் சாற்றைக் கடையில் வாங்கிப் பருகுவோர் போன்றவர்கள். அவர்கள் மேல் குற்றம் இல்லை. அவர்களின் வாழ்க்கை, வேகமும் பரபரப்பும் உடையதாக அமைந்துவிட்டது.

அதற்குக் காரணம். அவர்களின் கையில் கரும்பைக் கொடுத்துப் பயன் இல்லை; கருப்பஞ்சாறே தரவேண்டும். அருஞ் சொற்களோடு கூடிய அரிய நடையில் செய்யுள் வடிவில் நீண்டு அமைந்த காவியங்கள் இக் காலத்தார்க்குப் பயன்படுவதில்லை. புதிய காவியங்களைப் படைத்துத் தந்தால், இலக்கியமே பொழுது போக்காக உடைய ஒரு சிலர் மட்டுமே கற்கமுடியும். அந்தப் புலவர்களோ, "பழைய காவியங்கள் போதுமே; இவற்றையும் கற்க வேண்டுமா?" என்று புறக்கணித்துவிடுகின்றனர். ஆகவே காவியங்கள் தோன்றுவதற்கும் தோன்றினாலும் பரவுவதற்கும் இடம் இல்லாமல் போயிற்று. ஆகவே புலவர் அல்லாத மற்றவர்களுக்காகப் புது இலக்கியங்கள் தோன்றவேண்டிய தேவை உள்ளது. காவியத்தில் அமையும் உணர்ச்சிகளையும் கற்பனைகளையும் போராட்டங்களையும் வருணனைகளையும் செய்யுள் வடிவில் எழுதாமல் உரைநடையில் எழுத வேண்டிய தேவை ஏற்பட்டது. அருஞ்சொற்களை அகற்றி எளிய நடையில் எழுதும் திறன் வளர்ந்தது. இங்கிலையில் தோன்றிய புதிய இலக்கிய வடிவுகளே நாவல்கள் என்றும் சிறுகதைகள் என்றும் பெயர்பெற்றன. அச்சுப் பொறியின் வளர்ச்சி நாவல்களும் சிறுகதைகளும் மிகப் பலவாய்த் தோன்றிப் பெருகுவதற்குத் துணையாய் அமைந்தது. தடை இல்லாமல் நேரே படித்து உணர்வதற்கு உதவும் எளிய உரைநடை, அந்தப் புதிய இலக்கிய வகைகள் நன்றாகப் பயன்படுமாறு செய்கிறது. வேகமும் பரபரப்பும் உடைய இக்கால வாழ்க்கையில் பலரும் பெறக்கூடிய இலக்கிய விருந்துகளாக அவை உதவி வருகின்றன.

காலத்திற்கு ஏற்ப வாழ்க்கை வேறுபட்டதன் காரணமாக இந்த இலக்கிய வகைகள் தோன்றின என்பதைக் கண்டோம். முடியாட்சி முறையிலிருந்து குடியாட்சி முறைக்கு உலகம் மாறி வந்திருக்கிறது. இலக்கியத்துறையிலும் இத்தகைய மாறுதல் நிகழ்ந்துள்ளது. மக்களை ஆண்ட மன்னன் பழங்காலத்தில் சாதாரண மக்களைப்போல் உடுக்காமல் தனிச் சிறப்புடைய ஆடைகளை உடுத்து, முடி முதலிய அணிந்து வந்தான். பலரோடும் நெருங்கிப் பழகாமல் ஒரு சிலரோடு மட்டும் உறவுகொண்ட தலைவனாக விளங்கிவந்தான். அந்த ஒரு சிலர் மட்டுமே அவனோடு நெருங்கிப் பழகினார்கள். பெரும்பான்மையான மக்கள் தொலைவிலிருந்தே அவனைக் கண்டு போற்றினார்கள், அல்லது கேட்டு மகிழ்ந்தார்கள். பழங்காலக் காவியங்களும் அவ்வாறுதான் இருந்தன. காவியங்களின் செய்யுள் நடை அரசர் உடைபோல் கவர்ச்சியும் சிறப்பும் உடையதாக இருந்தது. காவியங்களோடு புலவர் ஒரு சிலர் மட்டுமே நெருங்கிய உறவு கொள்ள முடிந்தது. மற்றவர்கள் தொலைவில்நின்று காவியங்களின் கதைகளை மட்டும் கேட்டு மகிழ்ந்

தார்கள். காவியங்கள் இடத்தில் இன்று புதுமையாகத் தோன்றியுள்ள நாவல்களும் சிறுகதைகளும், குடியாட்சித்தலைவர்களைப் போன்றவை. குடியாட்சியில் ஆளும் தலைவர்கள் ஆடம்பர உடை உடுக்கத் தேவை இல்லை. அவர்கள் எளிய உடை உடுத்து மற்ற மக்களைப் போலவே வாழ வேண்டும்; பொதுமக்களோடு நெருங்கிய உறவும் கொள்ள வேண்டும். இந்தப் புதிய இலக்கிய வகைகளும் எளிய நடையில் அமைந்து வாழ்க்கையோடு ஒட்டியனவாய் நின்று பலரும் கற்கக் கூடியனவாய் விளங்குகின்றன.

வாழ்க்கையில் பழமையானவை மறைந்து புதுமையானவை தோன்றும். பழமை வரலாற்றில் இடம் பெறும்; பொருட் காட்சியில் இடம்பெறும். பழைய வாழ்க்கை இப்படி; பழங்காலத்துப் பொருள்கள் இவை என்று சொல்லக்கூடிய அளவில் முன்னோர் வாழ்க்கை மறைந்துபோகும். ஆனால் இலக்கியத்தில் பழைய கலைச்செல்வங்கள் எல்லாம் மறைந்துபோவது இல்லை. சிறப்புடையவை காலவெள்ளத்தைக் கடந்து வாழும். மற்றப் பழைய இலக்கியங்கள் மறைந்துபோவது இயற்கை. பழைய இலக்கியங்களில் சிறந்த சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலிய சில மட்டுமே கலைச்செல்வங்களாகப் பயன்பட்டு வருகின்றன. புதிய படைப்புகளாகிய நாவல்களும் சிறுகதைகளும் பற்பலவாய் வளர்ந்து பெருகி வருகின்றன. அவை பழைய காவியங்களோடு போட்டியிடுவதில்லை. இந்தக்காலத்தின் இலக்கியக்குழந்தைகளாக அவை உரிமையோடு தமழ்ந்து விளையாடி வளர்ந்துவருகின்றன. உலகமெங்கும் எல்லா மொழிகளிலும் இந்த நிலை காணப்படுகின்றது. வளர்ந்து வரும் இந்தப் புதிய இலக்கிய வகைகள் பழைய காவியங்களைப் போலவே தமக்கென்று வரம்பு கோலிக்கொண்டு தமக்குரிய பெருமையைக் காத்துக்கொண்டு கலைச் செல்வங்களாகப் போற்றப்பட்டு வருகின்றன. இது மகிழ்வதற்கு உரியதாகும்.

—"பாரதி"

Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press 2/65, Broadway, Madras-1.

Statement about ownership and other particulars about newspaper (Arambakkalvi) to be published in the first issue every year after last day of February.

FORM IV

(See Rule 8)

1. Place of Publication..............Madras.
2. Periodicity of its publication...Monthly.
3. Printer's Name......................P. Veeraraghavan.

    Nationality.................Indian.
    Address......................94/95, New St., Mannady, Madras-1.

4. Publisher's Name............P. Veeraraghavan

    Nationality...............Indian.
    Address.....................94/95, New St., Mannady, Madras-1

5. Editor's Name..............P. Veeraraghavan.

    Nationality...............Indian.
    Address.....................94/95, New St., Mannady, Madras-1.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total share capital. — P. Veeraraghavan, 94/95, New St, Mannady, Madras-1.

I, P. VEERARAGHAVAN, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd) P. VEERARAGHAVAN,
Publisher,
"Arambakkalvi."